பக்கங்கள் 16 Registered as a News paper விலை ரூபா 12.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்திரை 13 | 26-04-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 67

இடமாற்றம்

இதுவரை காலமும் மல்லாவி நகரில் இயங்கிவந்த ஐயப்பா நகை மாளிகை என்னும் (அமரா நகை மாளிகை) அடைவு நிலையம் 9-5-2002 முதல் நிறுத்தப்பட்டு 16-5-2002 முதல் கிளிநொச்சி தமிழ்க் கங்கை வண்ணச்சோலை முன்பாக இயங்கும் என்பதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகிறோம். உரிமையாளர் ஐயப்பா நகைமாளிகை மல்லாவி. (1758)

# ஜே. வி. பி. உள்ளிட்ட இனவாத சக்திகளின் பிரேரணையை எதிர்கொள்ள நாம் தயார்

## தொண்டமான், சந்திரசேகரன் அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்ததற்காக, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சில கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தால், அதனை எதிர்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், மலையக மக்கள் முன்னணித்தலைவர் பி. சந்திரசேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்களாக பதவி வகிக்கும் ஆறுமுகம் தொண்டமான், பி. சந்திரசேகரன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீம் ஆகியோர் தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஜே. வி. பி. திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

இது குறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

(16ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து நடைபெறும்

இன்றும் நாளை(27-04-2002)யும் ஓமந்தை, முகமாலை, உயிலங்குளம் சோதனைச் சாவடிகளூடான போக்குவரத்து வழமைபோல் நடைபெறும் என சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர்போக்குவரத்துகண்காணிப்புப் பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

## ஊதியம் இல்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் நீர்ப்பாசன திணைக் களத்தில் அமைய ஊழியர்களாக கடமைபுரியும் 159 சிற்றூழியர்களுக்கு சனவரி மாதம் முதல் சம்பளம் வழங்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 23பேரும், அம்பாறையில் 22 பேரும், முல்லைத்தீவில் 37பேரும், திருகோணமலையில் 16பேர்உட்பட 159பேர் வடக்குகிழக்கு மாகாணசபையில்நீர்ப்பாசனதிணைக்களத்தில் கடமையாற்றிவருகின்றனர்.

# ஒரு தேசஅரசு என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை

## -அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவிப்பு

ஒரு தேச அரசு என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடாத்தும் என்று சிறிலங்கா அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பல தசாப்தங்களாக நீடித்திருக்கும் இலங்கையின் இன நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு அரசாங்கம் மிகவும் ஆவலுடன் இருக்கின்றது எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

தாய்லாந்தில் எதிர்வரும் யூன்மாதம் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறும்போது அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொள்ளும் தூதுக் குழுவுக்கு பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தலைமை தாங்க உள்ளமை தெரிந்ததே

## தலைமன்னார் பகுதியில் பனைமரங்கள் அழிப்பு

தலைமன்னார் ஸ்ரேசனடிச் சந்தியிலிருந்து பிரதான வீதியில் நான்கு கிலோமீற்றர் நீளமான பகுதியின் இரு பக்கங்களிலுமுள்ள பனைமரங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன

இவ் வீதியின் இரு மருங்கிலும் 75மீற்றர் வரையான தூரப் பகுதியில் உள்ள பனை மரங்கள் புல்டோசர் பயன்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை ஒரு புறமாகத் தள்ளி எரிக்கும் போது அப்பகுதியிலுள்ள பெரிய பனைமரங்களும் எரிந்து போகின்றன.

மன்னார் தீவில் அண்மைக் காலமாக பெருமளவில் பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும், மூன்னரும் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளிவந்தமை தெரிந்ததே.

## பளைப் பகுதியில் கண்ணிவெடியகற்றல்

(கிளிநொச்சி)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பளை, வண்ணான்கேணிப் பகுதிகளில் மிதிவெடி, கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றது.

கடந்த 23ஆம் திகதி காலை 9 00 மணிமுதல் மாலை 5 மணிவரை மேற்படி பணிகளில் ஈடுபட்டிருந்த மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அப்பகுதியிலிருந்து 35 மிதிவெடிகளை மீட்டுள்ளனர்.

தொடர்ந்தும் அப்பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றும் பணிகளில் மேற்படி பிரிவினர் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# போராளிகள் களத்தில் படம் பிடிப்பதை வேறெந்த நாட்டிலும் கண்டதில்லை!

## பி. பி. சி. கொழும்புச் செய்தியாளர் வியப்பு

(நமது நிருபர்)

''இங்கு போராளிகள போர் முனைக்குப் படப்பிடிப்பாளர்களாகச் சென்று படப்பிடிப்பினை மேற்கொள்வது எமக்குப் பெரும் ஆச்சரியத்தினைத் தருகின்றது'' என பி பி. சி. உலக சேவையின் கொழும்புச் செய்தியாளர் பிரான்சிஸ் கரிசன் தெரிவித்துள்ளார்.

நேற்று எமது அலுவலகத்திற்கு வருகை தந்த அவர் மேலும் தெரிவிக்கையில்; ''வேறெந்த நாட்டிலும் போராளிகள் போர் முனைக்குச் சென்று படப்பிடிப்பினை மேற்கொண்டதில்லை. இதனை நாம் வேறெந்த நாட்டிலும் காணவும் இல்லை.

இவ்வாறான நடவடிக்கை போராளிகளிற்குப் பல்வேறு வகையில் பாடங்களைக் கற்றுத் தருகின்ற பயனுள்ள நடவடிக்கையாக அமைகின்றது'' எனவும் அவர் தெரிவித்தார்.

'உண்மையில் இவற்றைக் கண்டு நாம் வியந்துதான் போனோம்' என பிரான்சிஸ் கரிசன் மேலும் தெரிவித்தார். (இ)

## விசாரணைக்கு உத்தரவு

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரின் புதல்வர்கள் விடயத்தில் நடந்துகொண்ட முறைபற்றி சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீதான விசாரணைகளுக்கு சட்டமா அதிபர் உத்தரவு பிறபித்துள்ளார்.

நீதிமன்றிற்கு முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்தவை அழைத்துச் செல்ல உலங்குவானூர்தியைப் பயன்படுத்தியது தொடர்பாகவும் அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் இரு புதல்வர்களுக்கு அங்கு வழங்கப்பட்ட கூடுதல் சலுகைகள் தொடர்பாகவும் இவ் விசாரணைகள் நடைபெறவுள்ளன.

## நேர்நோக்கு

1994இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் பொதுசன ஐக்கியமுன்னணி வெற்றிபெற்றபோது, இனவாதமற்ற ஒரு முற்போக்கு கொள்கையுடைய தலைவரைக் கொண்ட ஆட்சி அமைந்துவிட்டதாக புத்திஜீவிகள் தெரிவித்தனர்.

ஆனால், அவர் சனாதிபதியாகி முதல் ஆறு வருடகாலங்கள் தமிழ் மக்கள்மீது கொடூர யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டார். தமிழ் மக்கள் தமது வரலாற்றில் என்றும் சந்தித்திராத அவலங்களைச் சந்தித்தனர்.

அக்காலப் பகுதியில் முன்னைய ஆட்சியாளர்களிலும் பார்க்க கொடூரமான இனவாத ஆட்சி நடைபெற்றது என்றே கூறலாம் ஏனெனில் தேர்தலுக்காக முன்னையவர்கள் இனவாதம் பேசினார்கள்: ஆனால், இவர் அக்காலப்பகுதியில் நடந்த ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்பாக ஒரு பெரிய படையெடுப்பைநடத்தி தான் தமிழரை வெற்றிகொண்டுவிடப்போவதாகக் கூறி அவர்களை இடம்பெயர்ந்து அலையவைத்தார்.

பின்னர் யுத்தத்தில் அவர் சந்தித்த படுதோல்வி, அவரது ஆட்சியதிகாரமும் இல்லாது ஒழிந்துபோகக் காரணமாகியது.

அவர் நடத்திய இனவாத அரசியல் வளர்த்துவிட்ட கட்சிகளாக ஜே. வி. பி யும் சிகல உறுமயவும் உள்ளன. இப்பொழுது ஜே. வி. பி யின் பின்னால் அவரது கட்சியும் இழுபட்டுச் சென்றுகொண்டிருக்கிறது.

அதாவது பேச்சுவார்த்தைகள் மூலம்-இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக மக்களுக்குவாக்குறுதி வழங்கி ஆட்சியைப்பிடித்து அதற்கு நேர்மாறாக இனவாத யுத்தமொன்றை நடத்தியதன் விளைவைச் சந்திரிகா அம்மையார் ஏழு வருடங்களில் சந்தித்தார்.

இருந்தும் அவர் தனது பின்னைய நிலைப்பாடான யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற கொள்கையைக் கைவிட்டு விட்டதாகத் தெரியவில்லை; அதாவது, அவர் தானும் ஓர் இனவாதி என்பதை ஐயத்துக்கு இடமின்றி நிரூபித்துவிட்டார் என்றே கூறலாம்.

— ஆனையிறவு மீட்பு தீச்சுவாலை முறியடிப்பு

# வெற்றிநாள் விளையாட்டு விழா

## துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி

(கிளிநொச்சி)

ஆனையிறவு மீட்பு வெற்றிச் சமரின் இரண்டாம் ஆண்டு நிறைவு, தீச்சுவாலை நடவடிக்கைக்கெதிரான முறியடிப்புச் சமரின் ஓராண்டு நிறைவு என்பவற்றின் வெற்றி நாளையொட்டி வட போர்முனைப் படையணிகளுக்கிடையிலான துவிச்சக்கர வண்டியோட்டப் போட்டி நேற்று நடைபெற்றது.

ஆண்களுக்கான போட்டி விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம் முன்பாகவும் பெண்களுக்கான போட்டி கிளி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாகவும் ஆரம்பமாகின.

விசுவமடுவில் ஆரம்பித்த நிகழ்வை வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆரம்பித்துவைத்தார். காலை 6 13 மணிக்கு இந் நிகழ்வு நடைபெற்றது. முன்னதாக கேணல் தீபன், குட்டிசிறிமோட்டார்படையணி சிறப்புத்தளபதி கேணல் பானு, விசுவமடு காவல்பணிமனைப்பொறுப்பாளர் ந கிருஷ்ணகுமார் ஆகியோர் போட்டியாளர்களுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்தினர். தொடர்ந்து இப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த போராளிகளுக்கும், உயிரிழந்த பொது மக்களுக்குமாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

கிளி. கனகபுரத்தில் காலை 6.00மணிக்கு ஆரம்பமான போட்டியை சோதியாபடையணி சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா ஆரம்பித்து வைத்தார். முன்னதாக மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் யாழினி மாலதி படையணியின் தளபதி தமிழ்ச்செல்வி. குட்டிசிறி மோட்டார் படையணி பெண்கள் சிறப்புத் தளபதி பவநிதி சோதியாபடையணித்தளபதிகளில் ஒருவரான ஜானகி ஆகியோர் போட்டியாளர்களுக்கு கைலாகுகொடுத்து வாழ்த்தினர்.

40 கிலோ மீற்றர் தூரத்துக்கு நடைபெற்ற இப் போட்டியின் ஆரம்பத்தில் சேவியர் கடைச் சந்திக்கு அண்மையில் சென்றுகொண்டிருந்த குறிஞ்சி இல்லத்தைச் சேர்ந்த போட்டியாளர் விபத்துக்குள்ளாகி காயமுற்றார். எனினும் எழுந்து தமது துவிச்சக்கர வண்டியை சீரமைத்து அவர் தொடர்ச்சியாகஓடி 7-17க்கு முதலிடத்தைப் பெற்றார்.

இரண்டாம் இடத்தை குறிஞ்சி இல்லத்தைச்சேர்ந்தவரும் மூன்றாவது இடத்தை நெய்தல் இல்லத்தைச் சேர்ந்தவரும் நான்காம் இடத்தைகுறிஞ்சிஇல்லத்தைச் சேர்ந்தவரும் ஐந்தாம்இடத்தை நெய்தல் இல்லத்தைச் சேர்ந்தவரும்பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான போட்டியில் சமர்க்களத்தில் ஒரு கரத்தினை இழந்திருந்த போராளியும் கலந்து கொண்டு 60 கிலோ மீற்றர் தூரத்தை ஓடி முடித்தார். இப் போட்டியில் முல்லை இல்லத்தைச் சேர்ந்தவர்கள் முறையேமுதலாம், நான்காம் ஐந்தாம்இடத்தைப் பெற்றனர். மருதம் இல்லத்தைச் சேர்ந்தோர் முறையே இரண்டாம்மூன்றாம் இடத்தைப் பெற்றனர். காலை 8.07க்கு முதலிடத்தைப் பெற்ற போராளிமுடிவிடத்தை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போர்ப்பயிற்சிக் கல்லூரியினால்ஏற்பாடு செய்யப்பட்டிருந்தஇப்போட்டி இரண்டாவது வெளிக்கள நிகழ்வாகும்.

நேற்றைய போட்டியை வீதியோரங்களில் நின்ற பல்லாயிரக் கணக்கான மக்களும், கண்டி வீதி பயணிகளும் கண்டு களித்தனர். மகமாலைதடைமுகாமில் இப் போட்டிகள் நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகளின் நிறைவில் வெற்றி விழாவை முன்னிட்டு ஆடிப்பாடிமகிழ்ந்தபோராளிகளுடன் பயணிகளும் இணைந்துகொண்டனர்.

தமிழீழக் காவல்துறையினர் வீதி ஒழுங்குகளை திறம்பட மேற்கொண்டு போட்டிகள் சிறப்பாக நடைபெற உதவினர்.

நேற்று வலைப்பந்தாட்ட போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(சோ)

## யுவதி கொலை குறித்த விசாரணை இடைநிறுத்தம்

மன்னார் பள்ளிமுனையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட யுவதி ஜெடா கமலிட்டாவின்வழக்குவிசாரணைகள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இக்கொலை தொடர்பாக இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள், மூன்று சார்ஜன்ட்கள் உட்பட பதினான்கு பொலிசார் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்,

மேற்படி சந்தேக நபர்கள் தமது பாதுகாப்பு நலன்கருதி மன்னார் நீதி மன்றத்தில் ஆஜராவதைதவிர்க்கும்பொருட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முறையிடுசெய்திருந்தனர்.

இதையடுத்து குறிப்பிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காததால் மன்னார் மாவட்ட நீதவான் எம். பி. முகைதீன் சந்தேக நபர்களுக்கு பிடிஆணைபிறப்பித்தார்.

எனினும் 05. 04. 2002 இலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மன்னார் நீதிமன்றத்திற்குக்கிடைத்த முறைப்பாட்டிற்குக் தீர்ப்பு கிடைக்கு வரை விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

— அபிவிருத்தி சம்பந்தமான —

## வழிவகை களை ஆராய ஐ. நா. குழு விஜயம்

தற்போதைய சமாதான முன்முயற்சிகளுடன் தொடர்பு பட்ட விதத்தில் நாட்டில் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் உதவும் வழிவகைகளை ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் தூதுக் குழுவொன்று கொழும்புக்கு விஜயம்செய்துள்ளது.

போர் அனர்த்தங்கள் காரணமாக மக்கள் வாழ்வில் ஏற்பட்ட பின் விளைவுகளிலிருந்து அவர்களை மீட்டெடுப்பது புனர் நிர்மாணம் போன்றவற்றை நோக்காகக் கொண்ட அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு தேவையான வளங்களை ஒரு முகப்படுத்துவது ஐக்கியநாடுகள் சபையின் தொழில்நுட்ப உதவியை விஸ்தரிப்பது என்பவற்றுக்கான சாத்தியக் கூறுகளை இந்தக் குழு ஆராயவுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது கண்ணி வெடிகளை அகற்றுவது, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, சிறுவர் அபிவிருந்தி போன்ற விடயங்களிலும் இது கவனம் செலுத்தவுள்ளது.

தேவைகளை ஆராயும் திட்டத்தின் முதல் கட்டமாக ஐ. நா. தூதுக்குழு கொழும்பு வந்துள்ளது. இதன் பின்னர் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதிகள் அதன் தொழில் நுட்ப விடயங்களை கையாள்வார்கள்.

இந்தப் பணிகளை கூடிய விரைவில் பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## சம்பளப்பணம் 10லட்சம் ஜாஎலவில் கொள்ளை

(கொழும்பு)

ஜாஎலப் பகுதியில் ஆயுதம் தாங்கிய குழுவொன்று பத்து லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணத்தைகொள்ளையடித்துச் சென்றுள்ளது. இந்த சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளது.

கட்டுநாயக்க பகுதியிலுள்ள தொழிற்சாலையொன்றின் தொழிலாளர்களது சம்பளப் பணமே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலக்கத்தகடில்லாத வாகனமொன்றில் வந்த ஆயுதம் தாங்கிய மூவர் இந்தக்கொள்ளையை நடத்தியிருப்பதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## பயணிகளை மயக்கி ரயிலில் கொள்ளை

(திருமலை)

திருகோணமலையில் இருந்து கொழும்பு செல்லும் ரயிலில் பயணம் செய்யும் பொது மக்களை மயக்கி அவர்களின் உடமைகளை அபகரிக்கும் கொள்ளைக் கோஷ்டிகள், தற்போது புதியதொரு முறையில் தங்கள் கைவரிசையைக்காட்டி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது பற்றி மேலும் விபரமாகத் தெரியவருவதாவது;

முன்பு ரயில் வண்டியில் பயணம் செய்யும் பொது மக்களிடம் மயக்க மருந்து கலந்த குளிர்பானம், இனிப்பு போன்றவற்றைக்கொடுத்து அவர்களின் தங்க நகைகள், பணம் மற்றும் உடமைகளை அபகரித்து வந்த இக் கோஷ்டிகள். தற்போது ஊசி மூலம் மயக்க மருந்து செலுத்திய தோடம் பழங்களை பயணிகளிடம் விற்று அவர்கள் மயக்க மடைந்ததும் தங்களின் திருட்டுத் தொழிலை மேற்கொள்வதாக கூறப்படுகிறது.

அண்மையில் திருமலை ரயிலில் பயணம் செய்த தாயும் மகளும் இவ்வாறு மயக்க நிலையில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டு, திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரு தினங்கள் தங்கி சிகிச்சை பெற்று வரும் வேளையிலேயே இந்தத் தந்திரோபாயம் தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது.

பிரயாணத்தின் போது நகைகளுடன் பயணித்த தாயையும் மகளையும் கண்ட மேற்படி கோஷ்டியினர் அதை அபகரிக்கும் நோக்குடன் நடந்து கொண்டதாக தெரியவருகிறது.

முதலில் தாயிடம் தோடம் பழத்தைக் கொடுத்ததாகவும் பழத்தை வாங்கிய தாயார் அதன் தோலை உரித்து மகளுக்கும் கொடுத்து தானும் சாப்பிட்டதாகவும் பின்பு இருவரும் மயக்கமடைந்ததும இவர்களிடமிருந்த பணம் மற்றும் நகைகள் அனைத்தும் களவாடப்பட்டதாகவும் மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ.ப)

— படையினரின் தமிழ்ப்பெண்கள் மீதான-

## பாலியல் வல்லுறவுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

தமிழ்ப் பெண்கள் மீது சிறிலங்கா படையினரும், பொலிசாரும் மேற்கொள்கின்ற பாலியல் துன்புறுத்தல்களை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை சிறிலங்கா அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள தமிழ்ப் பெண்கள் மற்றும் தடுப்புக் காவலில் இருக்கும் தமிழ்ப்பெண்கள் ஆகியோர் சிறிலங்கா பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியவற்றின் உறுப்பினர்களால பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதாக எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே, முப்படையினருக்கும் பொலிசாருக்கும் இவ்வாறான செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று திட்டவட்டமாக உத்தரவிடும்படி வேண்டிக் கொள்கிறோம் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் அங்கத்தவர்கள் கூறியுள்ளனர்.

## 18 மாணவர்களை இடைநிறுத்தமுடிவு

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகம் பதினெட்டு மாணவர்களை தற்காலிகமாகஇடைநிறுத்தி வைக்கவுள்ளது.

சென்ற மாதம் பல்கலைக் கழகத்தில் நடந்தசம்பவங்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட 18 மாணவர்களே இவ்வாறு இடைநிறுத்தப்படவுள்ளனர். இதில் பௌத்த பிக்கு ஒருவரும் அடங்குகின்றார்.

அதேசமயம் களனி பல்கலைக்கழக மாணவர்கள்இந்த இடைநிறுத்தத்தை ஆட்சேபித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு மனுவொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

## சந்திப்பு

வடமராட்சி கிழக்குப் பாடசாலையில் இருந்துஇடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லை கல்வி வலயங்களில் இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கான அவசர சந்திப்பு நாளை சனிக்கிழமை மு. ப, 10. மணிக்கு மு/மாத்தளன் றோ. க. அ. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் சகல தொண்டர், நிரந்தர ஆசிரியர்களும் தவறாது கலந்து கொளவதுடன் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுவினர்களும் சமுகம் தரும் வண்ணம் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்கள் வேண்டியுள்ளார்.


2ஆம் ஆண்டு நினைவுகள்

**வீரவேங்கை வீதுஷன்**

(பிறேமவாசன் பிறேம்குமார்-சோபன்)

- பளை -

ஜனனம்:- 20-08-1981 வீரச்சாவு:- 26-04-2000

முற்றத்தில் மலரும் பூஞ் செடியாய்
சுற்றத்தில் தவளும் குழந்தையாய்
வெற்றிக்கொடி ஏந்தும் இளவலாய் இசைஞனாய்
நற்றமிழ் வீரனாய் நாம் மகிழும் வேங்கையாய்
கற்றவனாய் கனவுகளாயிரம் கொண்டவனாய்
கொற்ற மாடிய வேங்கை நம் குலவிளக்கு
விற்திறன் போலொரு வெடியரசனாய்
குற்ற மறுத்துச் சரிந்தான் சோபன்.

த. மு: உனது பிரிவால் துயரடையும்
இல. 280/3 பாரதிநகர், அப்பா பிறேமவாசன்,
யோகபுரம், மல்லாவி. அம்மா டெய்சி, தம்பி றோகன்

(சி- 6815)


ஈழநாதம்

# வெள்ளிநாதம்



கலாசாரம் உயர் நிலை எய்தும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகின்றது; மனிதவாழ்வு உன்னதம் பெறுகின்றது; மனிதம் வளர்ச்சி பெறுகின்றது.

26.04.2002 வெள்ளிக்கிழமை




## வைரவரிகள்

■ உற்சாகத்தை கட்டாயமாகவோ இயல்பாகவோ வரவழைத்துக் கொள்ளுங்கள், செயற்பாடுகளை வரிசைப் படுத்திக்கொண்டு தயக்கமில்லாமல் முன்னேறிச் செல்லுங்கள். உங்களது ஒழுங்கான தொடர்ச்சியான நடைமுறை- தடைகளை விலக்கி முன்னேறிச் செல்ல வழி சமைத்துக் கொள்ளும்

தாமஸ் அல்வா எடிசன்

■ இரண்டு மொழிகள் தெரிந்த மனிதன் இரண்டு மனிதர்களுக்குச் சமன்.

பிரான்ஸ் பழமொழி

■ நகைச்சுவை உணர்ச்சி இல்லா விட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகி விடும்.

பேர்னாட்ஷா

■ அடுத்தவர்களிடம் அன்பாக நடந்து கொள்ளும் சமயத்தில் நீங்கள் சொர்க்கத்தை நேரில் காண்பீர்கள்.

நோவாலிஷ்

■ நீங்கள் உண்மையானவர்களாகவும், அன்பு உடையவர்களாகவும் இருந்தால் ஒருபோதும் யாருக்கும் பயப்படவேண்டியது கிடையாது.

விவேகானந்தர்

## வெள்ளிநாதம்

# சாத்தானும் வேதம் ஓதுகின்றது!

பன்முகப் பரிமாணம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கத் தவறிவிட்டோம். தேசத்தைக் கட்டமைக்கின்ற முக்கிய பணியில் சுதந்திர மடைந்த காலத்தில் இருந்தே நாம் தவறிழைத்து விட்டோம்'- இப்படி ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை இந்தியாவில் வைத்துப் பகிரங்கமாகவே வெளியிட்டிருப்பவர் வேறுயாருமல்ல, சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ''அதி உத்தம' சனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவே தான்...

அதிர்ச்சியாக இருக்கிறதல்லவா? ஆனால் சந்திரிகாவின் இயல்பை முழுமையாகப் புரிந்து கொண்ட எவருக்குமே இது அவர் ஓதுகின்ற 'புதிய வேதம்' என்பது தெளிவாகப்புரியும்.

1990 களின் மத்தியில் சமாதானப் புறாவாக தன்னை உலகளாவியவகையில் இனங்காட்டிக் கொண்டு அரசியலில் அவர் பிரவேசம் செய்த வேளையில் அவர் செய்த பிரகடனங்களையும், வெளியிட்ட அறிக்கைகளையும் மீண்டும் ஒரு தடவை 'அசை' போட்டுப் பார்க்கும் எவருக்கும் இவரது இந்தக் கூற்றின் 'நிஜ முகம்' தெளிவாகப் புரிந்துவிடும்.

1995 இல் முதன்முதலில் அவர் ஜனாதிபதியாக பதவியேற்றவேளையில் 'யுத்த நிறுத்தம் சமாதானம்' என்ற கோஷத்தையே தனது உறுதியான அரசியல் இலக்கு என உரத்து முழங்கிய போதும், உண்மையில் தமிழ்மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்றுகூறி அது தீர்க்கப்பட வேண்டும் என்றும் இந்தப்பிரச்சினைக்கு யுத்தமூலம் தீர்வுகாணப்பட முடியாது என்றும் வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்த போதும் சிலிர்த்துப்போய் திரும்பிப் பார்த்தது தமிழ்ச்சமூகம் மட்டுமல்ல, சர்வதேசமும்தான்.

ஆனால் தென்றலாக தேவதை வேடமிட்டு வந்த சந்திரிகா வெறும் நான்கு மாதகாலத்திற்குள்ளேயே 'சமாதானத்திற்கான யுத்தம் என்று தன் பிரகடனத் தொனியை மாற்றிக்கொண்டபோது திகைத்துப் போனது தமிழ் சமூகம் மட்டும்தான். சர்வதேசம் அதை ஒரு அரசியல்வாதியின் கொள்கை மாற்றமாக மௌனமாக ஜீரணித்துக் கொண்டது.

தேவதை வேடத்தில் வந்தது ஒரு கெட்ட சாத்தான் தான் என்பதை தமிழ்மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கிய வேளையில் தென்றல் தேவதை சூறாவளிச் சாத்தானாகி அவர்களின் வாழ்வை வேரோடு துவம்சம் செய்து எக்காளமிட்டு சிரிக்கத் தொடங்கிவிட்டது.

1995 முதல், 2001 வரையிலான காலப் பகுதிக்குள் சந்திரிகா ஓதிய வேதங்களும், மேற்கொண்ட நடவடிக்கைகளும் தமிழ் மக்கள் வாழ்க்கையில் தொடர்ந்து இரத்தவாடை வீசும் துயர அத்தியாயங்களை எழுதியது.

இன்று இந்தியாவில் கூறியுள்ள சந்திரிகாவின் இந்தவார்த்தைகள் இவரின் உளப்பூர்வமான, உணர்வுபூர்வமான இயல்பானவார்த்தைகளாக இருந்திருக்குமேயானால் தமிழின அழிப்பிற்காக ஒரு கொடிய தொடர் போரை சிறிலங்காவின் மனிதவளம் உட்பட சகல வளங்களையும் பயன்படுத்தி உலகலாவிய ரீதியில் நாடு நாடாக கையேந்தி, கடன்வாங்கி, நடத்தியிருக்கமாட்டார்.

யாழ். குடாநாட்டு மக்களை ஒட்டுமொத்தமாகவே இடம் பெயரவைத்து, அவர்களை ஏதிலியராக்கிய, எக்காளமிட்டுஇராணுவவெறியாட்டம் ஆடிய அனுருத்த ரத்வத்தைக்குதனது அன்பு மாமனுக்கு - அந்த அளப்பெரும் சாதனைக்காக ''ஜெனரல்'' பதவி வழங்கிக்கௌரவித்திருக்கமாட்டார்.

இந்தநாட்டில் விடுதலைப்புலிகளின் பயங்கரவாதப்பிரச்சினை மட்டும்தான் உள்ளது என ஊர் ஊராய், நாடு நாடாய் தனது ''கைத்தடி'' கதிர்காமரை அனுப்பி பொய்பிரச்சாரங்களை மேற்கொண்டு உலகின் கருத்தைதிருப்பிஉண்மை நிலைமைகளை மறைத்திருக்க மாட்டார்;

எல்லாவற்றையும்விட தனது போர் வெறிக்கும் தீனியாக, சிங்கள இளைஞர்களையும், சிங்கள தேசத்தின் வளத்தையும் பலியாக்கியுமிருக்க மாட்டார்

அவருடைய கருத்துக்களையும், நடவடிக்கைகளையும் அவரது மக்களே இப்போது தூக்கியெறிந்துவிட்டு இப்போது அவரை தூக்கியெறிவதற்கான ''காலத்திற்கு'' காத்திருக்கும் வேளையில் இப்போது மீண்டும் பழைய அந்த வேதத்தை புதியராகத்தில் ஓத ஆரம்பித்துள்ளார்.

கிட்டத்தட்ட, அதிகாரம் இருந்தும் அவற்றைப்பயன்படுத்த இயலாத கையறு நிலையில், அவரைத்தூக்கிவைத்துக்கொண்டுகூத்தாடியவர்களே அவருக்கு எதிராகத் திரும்பிநின்று கோஷமிடும் நிலையில் தனது அண்மைக்கால விரக்தி மௌன நிலையை வெளிநாட்டில் போய் கலைத்தவராய் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.



அவர் இந்தக் கருத்தை ஏன் இப்போது போய் இந்தியாவில் நின்று கொண்டு பேசுகிறார் என்று ஆராய்வதும் அவசியமானதாகும்

எந்த வகையில் இதனை ஆய்வு செய்தாலும் சாத்தான் வேதம் ஓதுவது ஒருபோதுமே நல்லதற்கல்ல என்பதே இறுதி முடிவாக வரும் என்பது தெளிவு.

# பழைய ஆசைகளும் புதிய அரசியல் நிலைமைகளும்

மு. திருநாவுக்கரசு

துன்பப்படும் மக்கள், தமக்குத் தெரியும் ஒரு சிறு ஒளிக்கீற்றையும் கூட பற்றிப்பிடிப்பது வழக்கம். அவலமும் துயரமும் நிறைந்த சூழலில் எங்கிருந்தோ பார்த்தசாரதியின் குரல் கேட்டது. மகாபாரதம் நினைவுக்கு வந்தது. பூரித்தெழுந்த மக்கள் பார்த்தசாரதிகளுக்கும் பார்த்திபன்களுக்கும் நிலபாவடை விரித்தனர். நிலபாவடை விரிக்கும் போது மக்கள் அறிந்திருக்கவில்லை தங்கள் கோவணங்கள்கூட பறிபோகப்போகின்றன என்பதை.

நிலபாவடை தூக்கும் ஒவ்வொரு கணமும் கோவணத்துணியும் ஞாபகத்திற்கு வரவேண்டும். எங்கள் வரலாறு அதைத்தான் எமக்குப் போதிக்கின்றது. நாங்கள் கண்ட ''சமாதானத் தேவதைகளும்'', ''ரத்தத்தின் ரத்தங்களும்'' கொள்ளிக்குடமெல்லவா இப்போது தூக்குகின்றனர். கற்புக்குலையாக் கண்ணகிகள் துட்சாதனன்களுக்கு விளக்கேந்தும் காலமிது. தந்தை இறந்த பின்பு பாசம்மிகு தலைமகன் கொள்ளிவைப்பதும், தாய் இறந்தபின்பு பாசம்மிகு கடைசிமகன் கொள்ளி வைப்பதும் எமது பண்பாடு; அதன் உச்சமோ என்னவோ உயிருடனிருக்கும் தமிழருக்கு ரத்தத்தின் ரத்தங்கள் கொள்ளிக்குடம் தூக்கும் காலமிது.

''துன்பப்படுவோரே பாக்கியவான்கள்'' என்று கிறீஸ்து சொன்னார், துன்பங்களை உண்டாக்கி ஆனால் பாக்கியங்களை இன்னும் காணவில்லை.

''தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று எஸ். ஜே. வி. கூறினார். தமிழ் மக்களை இரண்டரை தசாப்தங்களுக்கு மேல் வழிநடத்தியவரின் வாக்கியமிது. ஒரு சாராரால் ''ஈழத்துக்காந்தி'' எனவும், இன்னொரு சாராரால் ''காற்சட்டை காந்தி'' எனவும், பொதுவாகத் ''தந்தை'' எனவும் கூறப்பட்ட ஒருவரின் வாக்கியமிது.

அவர் அதை ஏன் கூறினாரோ நாம் அறியோம். அவர் தமிழ் மக்களை கடவுளர்களிடம் ஒப்படைத்தார் என்பதுமட்டும்உண்மை ஆனால்அதற்காக நாங்கள் தேவதைகளிடமும், காய்பிய நாயகர்களிடமும், காப்பிய நாயகிகளிடமும் கருணைவேண்ட முடியாது.

சமாதானத்தை நேசிப்பதாக தேவதைகளின் குரல்கள், ரத்தத்தின்ரத்தங்களின்குரல்கள்தொடர்ந்து ஒலிக்கின்றன. கொழும்பிலுள்ள இரண்டு ஆட்சியாளர்களில் ஒருவரான சந்திரிகா இப்போது நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை நியமித்திருக்கின்றார். சமாதான நடவடிக்கைகளிலுள்ள சரி, பிழைகளை ஆராய்ந்து சனாதிபதியிடம் இக்குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.


விசாரணைக் குழுக்களை நியமிப்பது நல்லதற்கான வழிகளைத் தேடுவதற்காகத்தான் என்பது உலகளாவிய வழக்கம். ஆனால் இலங்கையில் தமிழ்மக்கள் சம்பந்தமாக நியமிக்கப்படும் விசாரணைக் குழுக்கள் எதிர்மறையான பலாபலன்களைக் கொண்டவை, அல்லது அவ்வாறான நோக்கங்களைக் கொண்டவை.

தமிழையும் சிங்களத்தையும் உத்தியோக மொழிகளாக்க வேண்டுமென்ற 1944 ஆம் ஆண்டு அரசாங்க சபைத் தீர்மானத்திற்கிணங்க அதனை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறியுமாறு ஆதர் விஜயவர்த்தனா தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு 1955 ஆம் ஆண்டு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில் தமிழ், சிங்களம் எனும் இரு மொழிகளுக்குப் பதிலாய் சிங்களம் மட்டும் என ஒரு மொழியை நடைமுறைப் படுத்துவது நலம் என விஜயவர்த்தனா தனது தனிப்பட்ட குறிப்பொன்றை எழுதியிருந்தார்.

அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைக்கு வெளியே அவர் எழுதிய அந்தக் குறிப்பு நாட்டின் மொழிப் பிரச்சினையைப் பூதாகாரமாக்கியது. சுயபாஷா கொமிஷன் அறிக்கை இறுதியில் நாட்டின் இன்றுவரையான இரத்தாற்றுக்கு கத்தியெடுத்துக் கொடுத்தது.

1983 யூலை இனப்படுகொலை அரங்கேறியதும் கண்துடைப்பிற்கு சஞ்சோனி விசாரணைக் குழுவை ஜே. ஆர். நியமித்தார். அந்த அறிக்கை தமிழ் மக்களுக்குச் சாதகமாய் அமைந்து விட்டமையால், அல்லது இனப்படுகொலையாளர்களை அடையாளங் கண்டுவிட்டதால் பாதுகாப்புக் காரணங்களின் பெயரால் அந்த விசாரணை அறிக்கையை இருபத்தைந்து ஆண்டுகள் வெளியிடப்படக்கூடாதென முத்திரையிடப்பட்டு மூடப்பட்டுவிட்டது.

ஒன்றில் அறிக்கை தமிழ் மக்களுக்குப் பாதகமாய் வரும்; அப்படிச் சாதகமாய் வந்தால் அது முத்திரையிடப்பட்டு மூடப்பட்டுவிடும். ஆதலால் சந்திரிகா எழுப்பும் குரல்களின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது அவரது நிமால் சிறிபால டி சில்வா விசாரணைக் குழுவின் நோக்கம் நல்லதாக இருக்க முடியாது. விசாரணைக்குழு அறிக்கையைக் காட்டி நிலைமையைச் சிக்கலாக்க சந்திரிகா அடியெடுத்து வைத்துவிட்டார். ஆதலினால் விசாரணைக் குழுவை ஓர் அபாய மணியாகவே எதிர்கொள்ள வேண்டும்.




சந்திரிகா அவ்வாறு விரும்புகின்ற போதிலும் அரசியற் சூழ்நிலை பழையநிலையில் இல்லை. அரசியற் சூழ்நிலையை உள்நாட்டரசியற் சூழல், உபகண்ட அரசியற் சூழல், சர்வதேச அரசியற்சூழல் எனப் பலவாகக் கூட்டியே பார்க்க வேண்டும் என்ற போதிலும் இலங்கையின் அரசியல் யாப்பு அமைப்பு எனும்ஒற்றை நாலுக்குள்ளால் மட்டும்இங்கு சில அவதானிப்புக்களை நோக்குவோம்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறைமை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை எனும் இருஅம்சங்களும்இலங்கையின் இரு தனிப்பெரும் சிங்களக்கட்சிகளையும் அடிப்படையில் குணாம்சரீதியான மாற்றமடையுமாறு ஆணையிடுகின்றன; தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தமிழர் ஆகிய மக்களின் ஆதரவின்றி சிங்கள-பௌத்த ஆதரவுடன் மட்டும் ஆட்சிசெய்ய முடியாதென்ற நிலைமை யாப்புரீதியாக ஏற்பட்டுள்ளது.

ஒருபுறம் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இரு பெரும் சிங்களக் கட்சிகளையும் நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை பெறமுடியா நிலைக்கு பெருமளவு தள்ளிவிட்டது; அத்துடன் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தெற்கில் சிதறிவாழும்முஸ்லிம்களை ஓர் அரசியற்சக்தியாகத்திரள வழியமைத்துக் கொடுத்தது. முஸ்லிம் மக்களுக்கிருந்த அரசியற்பிரச்சினைகளின் பின்னணியின் மத்தியில் மேற்படி விகிதாசாரப்பிரதிநிதித்துவம் கைகொடுக்கவே தீவு தழுவியரீதியில் முஸ்லிம் காங்கிரஸ் உருத்திரள முடிந்தது, அத்துடன் தெற்கில் ஏதாவதொரு சிங்களக் கட்சியை சார்ந்திருக்க வேண்டும் என்ற நிலையும் முஸ்லிம் மக்களுக்கு இல்லாது போகவே சிங்களக்கட்சிகளின்பழைய இனவாதப்பிடிசற்று தளர வேண்டி ஏற்பட்டுள்ளது.

இப்பின்னணியில் இப்போது இரு பெரும் சிங்களக் கட்சிகளுக்கும் அப்பால் தமிழ், முஸ்லிம், மலையகஅரசியற் சக்திகள் நிராகரிக்கப்பட முடியாதவை என்ற நிலையைப்பெற்றுள்ளன.

மேலும் இன்னொரு அரசியல் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. அது ஜே. வி. பி. யின் நாடாளுமன்ற அரசியல் வளர்ச்சியாகும். சந்திரிகாஇப்போது ஜே. வி. பி.யுடன்கூட்டுச்சேர்ந்திருக்கின்றார் என்பது வேறுவிடயம். ஆனால் சந்திரிகாவிற்குரிய அல்லது சு. க. விற்குரியவாக்குக்களைத்தான் ஜே. வி.பி. பிரித்தெடுத்து வளர்கின்றது. என்பது முக்கிய விடயம்: இது விகிதாசாரப்பிரதிநிதித்துவ முறைக்கு வெளியே மேலும் சு. க. அறுதிப்பெரும்பான்மை பெறமுடியாத நிலையை வளர்த்து வருகின்றது. இதன் மூலம் சு. க. வின் சக்தி அரசியற்களத்தில் மேலும் சுருங்குகின்றது. ஒருபுறம் சு. க. வில் இருந்த முஸ்லிம் மக்கள் விகிதாசாரப்பிரதிநிதித்துவத்தின் உதவியால் முஸ்லிம் காங்கிரஸை சாய முடிந்துவிட்டது. அதில் சு. க. வின் வாக்கு வங்கி ஒருவெட்டுவாங்கியது. மறுபுறம் ஜே. வி. பி. யின் வளர்ச்சியானது சு. க. வின்வாக்கு வங்கிக்கு மேலும் ஒரு வெட்டுப்போட்டுவிட்டது. ஆகவால் சு. க. வும் சந்திரிகாவும், அனுராவும் நினைத்தமாதிரியெல்லாம் நடக்க முடியாது.

ஐ. தே. க. வின்வாக்குவங்கியை ஜே. வி. பி. வெட்டவில்லைத்தான் ஆனால் சு. க. வின் வாக்கு வங்கியில் முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சி ஒரு வெட்டுப்போட்டுள்ளது. போலவே ஐ. தே. க. வின் வாக்கு வங்கியிலும் ஒரு வெட்டுப் போட்டுள்ளது. மலையக மக்கள் பொறுத்தும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இப்படிச் சாதக நிலையையேகொண்டிருப்பதால் அது முதல் நிலையில் ஐ. தே. க. விற்கான சொரிகல் வாக்குகள் சேர்வதைத்தவிர்த்து விட்டது.

இப்போது வாக்குவங்கி இரு பெரும் சிங்களக் கட்சிகளுக்கும் வெளியே தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் என மூன்று பலமான வாக்குத்திரட்சிகளாகி விட்டதுடன் நான்காவதாக ஜே. வி. பி. யும் ஒரு திரட்சியாகிவிட்டது. இந்த நான்கு திரட்சியான சக்திகளின் பின்னணியில் இரு கட்சிமுறை என்பதற்குப் பதிலாக மேற்படி ஏதோ ஒரு கட்சியின் தலைமையிலான கூட்டுக்கட்சி ஆட்சிமுறை எனும் நிலையே அதிகம் வளர்கின்றது. இப்பின்னணியில்இனவாதம் முன்பைவிடப் பலவீனப்பட்டுள்ளதால் சந்திரிகாவின் விசாரணைக்குழுவினால் முழுவீரியம் மிக்க இனவாதத்தை பிறப்பிப்பது கடினம். ஆனாலும் தாக்கம் விளைவிக்க முடியும். ஆதலால் இனவாதத்தை புதிய வளர்ச்சி நிலைமைகளுடன் சேர்த்தே ஆராயவேண்டும் என்பதுடன் கருணைக்கடல்களையும் உணர்ச்சிகளுக்கு வெளியே அறிவுமட்டத்துக்குள் இறக்கியே ஆராய வேண்டும். ■

விசாரணைக் குழுக்களை நியமிப்பது நல்லதற்கான வழிகளைத் தேடுவதற்காகத்தான் என்பது உலகளாவிய வழக்கம். ஆனால் இலங்கையில் தமிழ்மக்கள் சம்பந்தமாக நியமிக்கப்படும் விசாரணைக் குழுக்கள் எதிர்மறையான பலாபலன்களைக் கொண்டவை, அல்லது அவ்வாறான நோக்கங்களைக் கொண்டவை.

அறிவியல்

# இலத்திரனியல் போர்முறை

ஆரூரன்

உயிர் வாழ்தலிற்காக எந்தவொரு உயிரும் ப்போட்டியிட்டோ, போரிட்டோ வாழமுடியும். வாழ வேண்டும் எனபதை ''தக்கன பிழைக்கும் அல்லனமடியும்'' என்றே கூற்று. மனிதனும் தன்னுடைய இனத்தைத் தக்க வைப்பதற்கான போட்டியில், முனைப்போடு விழிப்போடு வரலாற்றுக் காலந்தொட்டே ஈடுபட்டு வருகின்றான். அவனது சிந்தனையாற்றலும், அறிவும் வாழ்வியலிற்கான போட்டியின் தராதரத்தை, முறைகளைத்தான் உயர்த்தியுள்ளதே தவிர, மனிதன் என்ற தனித்துவ வாழ்வு முறையை உலகில் நிலை நாட்டவில்லை. பலமுள்ள நாடுகள், இனக்குழுக்கள் தங்கள் மேலாண்மையை நிலை நிறுத்தும் நாகரீகமான அச்சுறுத்தல்கள், வழிமுறைகள். புரிந்துகொள்ளப்பட்டு மீற முயற்சிக்கப்படும் போது போரை முன்னெடுக்கின்றன: மனித வரலாறு கடந்துவந்த ஒவ்வொரு காலப்பகுதியும் போர்களின் குருதி படிந்த பக்கங்களாகவே பார்க்க முடியும், காலம் மாற மாற போரின் முறைகளும் நுணுக்கங்களும் விருத்தியடைந்தன எவறு இலத்திரனியல் போர் ஆரம்பமானதோ அன்றுதொட்டு அதை முறியடிப்பதன் மூலம் போரை செல்வதற்கான ஆய்வுகளும் தொடரத் தொடங்கின. அண்மைக் காலங்களில் நடந்த போர்கள் வலிய நாடுகளின் உயர் தொழில்நுட்பப் பரீட்சிப்புக் களங்கள் போலவே இருந்தன.

இலத்திரனியல் போர் முறை;- மின்காந்த அலைப்பட்டையின் (Emws)சிறந்த பிரயோகமே இன்றைய நவீனயுத்தம் தங்களது இலக்கைத்தெரிவு செய்ய, இனங்காண, விரைவாகத் துல்லியமாகத்தாக்க எந்தத்தரப்பு மிக நுணுக்கமாக பயன்படுத்துகிறதோ அது மிகக் குறைந்த இழப்புடன் வெல்லும். ஆகவே, இலத்திரனியல் போர் முறையின் பிரதான நோக்கங்கள், எதிரிகளின் மின்காந்த அலைப்பட்டையின் (em) பயன்படுத்தலைத் தடை செய்தல், தமது படைகளின் (Emws) பயன்பாட்டை எதிரித் தாக்குதலிலிருந்து பாதுகாத்தல் ஆகியனவே.

இதன் பிரதான பிரிவுகள்:-

1. Esu என்பதால் குறிப்பிடப்படுவதாகும். அதாவது, மற்றையதரப்பின் இலத்திரனியல் பயன்பாட்டினை சிறப்பு உபகரணங்களைப்பாவித்து எமக்குச் சாதகமாக்கிக்கொள்ளல். தொலைத் தொடர்புகளை ஒட்டுக்கேட்டு செய்திகளை எடுத்தல் இதில் அடங்கும். Esu ஆனதுமுதலாம் உலக யுத்த காலத்திலிருந்து ஓரளவு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

2. Ecm என்பதால் குறிப்பிடப்படும் இது எதிர்த்தரப்பின் தொலைத்தொடர்பினையும், கண்காணிப்பு முறைகளையும் இலத்திரனியல் வழி முறைகளின் மூலம் முற்றாகச் செயழிழக்கச்செய்வதைக் குறிக்கிறது;

3. Eccm இன் தாக்குதலால் ஏற்படும் அபாயங்களைத் தவிர்த்துக் கொள்ளும் சகல நடவடிக்கைகளும் (Ant Ecm) என அழைக்கப்படலாம். அதாவது, (Ecm) இற்கு எதிரானது என அர்த்தங்கொள்ளப்படும். இனி Eccm ஐ முறியடிக்க Fcccm என இப்பதில் நடவடிக்கைகள் நீண்டு செல்லலாம்.

வளைகுடாப் போரின்போது, மேற்கத்தைய நாடுகள் தமது இலத்திரனியல் போர்முறையின் செயல் திறனைப் பரீட்சித்துப்பார்த்தன. நாம் எவ்வாறு ஈராக்கிய கடற்கலங்களை ஏமாற்றினோம். அழித்தோம் என்பன போன்ற கட்டுரைகள பாதுகாப்புச் சஞ்சிகைகளில் காணப்படும் வழக்கமான விடயம்.

இலத்திரனியல் ஆனது எந்த எல்லைவரை பிரயோகிக்கப்படுகின்றது என்பது கேள்விக்குரியதே. ஆயினும் மலைப்பூட்டும் ஆங்கிலச் சொற்களும் சுருக்கக் குறியீடுகளும் அவை பற்றிய விவரமாக வரும் திரைப்படங்களும் உண்மையில் வெல்லமுடியாப் பிரமிப்பையே ஏற்படுத்தும்.

> மின்காந்த அலைப்பட்டையின் (Emws) சிறந்த பிரயோகமே இன்றையநவீனயுத்தம். தங்களது இலக்கைத்தெரிவுசெய்ய இனங்காண, விரைவாகத் துல்லியமாகத்தாக்க எந்தத்தரப்பு மிக நுணுக்கமாக பயன்படுத்துகிறதோ அது மிகக் குறைந்த இழப்புடன் வெல்லும். ஆகவே, இலத்திரனியல் போர் முறையின் பிரதான நோக்கங்கள், எதிரிகளின் மின்காந்த அலைப்பட்டையின் (em) பயன்படுத்தலைத் தடைசெய்தல், தமது படைகளின் (Emws) பயன்பாட்டை எதிர்த் தாக்குதலிலிருந்து பாதுகாத்தல் ஆகியனவே.

ஒரு விமானத் தாக்குதல் ஒன்றை எதிர்பார்க்கும் நாடு ஒன்று. அந்தச் சூழ்நிலையில் எவ்வாறு இலத்திரனியல் போர்முறை மூலம் தன்னைப் பாதுகாக்கமுடியும்.

ஒரு நாடு தனது வான் எல்லைக்குள் விமானங்கள் நுழையும்போதே அதனை இனங்கண்டு, அதன் வழித்தடத்தைப் பின்பற்றி, எதிரியினது என்பதனை உறுதிப்படுத்தி, அதனை அழிக்கமுபற்சித்தால்மட்டு மேசுப்பசோனிக்வேகக்குண்டுவீச்சு விமானங்களின்துல்லியமானதாக்குதலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும்நாம் இலக்கை இனங்கண்டபின் அதனை எதிரியினது எனக் கண்டறிந்து அழித்துவிடும் வல்லமை கொண்ட விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகவே தாக்குதலிற்கு வரும் விமானங்கள், தம்மை இனங்காணக்கூடிய றாடர்களை ஏமாற்ற வேண்டும் அல்லது அழிக்கவேண்டும். இதனைச் செய்வதற்கு Aem ஐப் பயன்படுத்தலாம். இவை றாடர்களிலிருந்து வெளிவரும் மின்காந்தக் கற்றையை நாடிச்சென்று அதனைத் தாக்கி அழிக்கும்; இல்லாவிட்டால் 'ஜாமர்'கள் என அழைக்கப்படும் கருவிகளின் மூலம் தமது நிலையை றாடர்கள் அறியமுடியாமல் றாடர்களை ஏமாற்றலாம். இதற்கு மேலதிகமாக (EJ) என்று அழைக்கப்படும் எதிரி றாடர்களை குழப்புவதையே பிரதான பணியாகக் கொண்ட விமனங்களின் துணையுடன் முன்னேறலாம். இவை Ecm நுணுக்கங்கள். இனி இதனை முறியடிக்க பல மற்றைய தரப்பு Eccm முறைகளைப் பின்பற்றத்தவறின் அவர்கள் அழிக்கப்படலாம். Hojm என அழைக்கப்படும் Homo-on எனப்படும் ஏவுகணைகள் 'ஜாமர்' போன்ற மின்காந்த அலைக் குழப்பத்தை ஏற்படுத்தும் கருவிகளை தேடிச்சென்று அழிக்கும் தன்மை கொண்டது.

இனி விமானத் தாக்குதல் அணி Eccm தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்கவேண்டுமாயின் அதற்கான ஒரு முறையை அவர்கள் விரித்திசெய்யவேண்டும். அதனை வேணுமாயின், Ecccm எனக் கூறமுடியும்,

இனி மற்றைய தரப்பு இவ்வாறான முறைகளை முன்கூட்டியே எதிர்பார்த்து அதற்கான எதிர்நடவடிக்கையை முதலில் செய்துகொள்ள முந்துமாயின், அது வெற்றிபெறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

இது ஒரு றாடர்உடன்தொடர்புபட்ட Ecm Eccmமுறைகளே, ஆனால், தொலைத்தொடர்புதொடக்கம் படைநகர்வுவரை சகலவற்றையும் முடக்கக்கூடிய வகையில் இலத்ரதினியல் பயன்பாடுகள் ஆய்வுகள் கண்டுபிடிப்புப்புகள் தொடர்ந்து கொண்டேதான் உள்ளன.

ஆயினும், அம்புஷல்வின்முன்துப்பாக்கிகள் செயல்திறன் மிக்கதுஎன்பது எவ்வளவு உன்மையே, துப்பாக்கி இலக்கை விழுத்தாது என்பது பயன்படுத்தும் மனிதனிலேயோ தங்கியுள்ளது. இது உயர் தொழில்நுட்பத்திலும் பொருந்தும்;

ஓர் கடுமையான களத்தில் ஒருவன் அம்புடனா, துப்பாக்கியுடனா உள்ளான் என்பதல்ல பிரச்சினை. அவன் எய்த அம்பு மிகச் சரியாக இலக்கை நோக்கியதா என்பதே முக்கியம். ''வல்லவனிற்குப் புல்லும் ஆயுதம்''

குறிப்பு;-

Eccm இதனை - மின்காந்த அலைகளின் பட்டைபெனக் கூறமுடியும் மின்காந்த அலை அதிர்வெண் அடிப்படையில் பிரித்தும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இபற்கை எமக்கு மிகப் பரிட்சயமான ஒரு மின்சார அல ஒளியாகும்; அதிர்வெண்கள் மாறுபட அலைகளின் பண்புகள் மாறுபடும். கீழே உள்ள அதிர்வெண் குறைந்தவைகள் இலகுவாக உருவாக்கப்பட்டன. அதிர்வெண் கூடிக்கொண்டு செல்ல அல தொடர்பின் தொழில்நுட்பங்கள் சிக்கல் மிகுந்ததாகிக் கொண்டு செல்லும்

## மதவடி மயிலர்

செய்தி-: பொங்குதமிழுக்கு ஈ. பி. டீ. பி. தீவகத்தில் தடை

மயிலர்-: கையாலாகாத்தலம் பாருங்கோ அழிகுடிசொற்கேளாது. சாகிறவனுக்கு மருந்து உட்செல்லாதென சொல்லுறது உண்மைதான்;

செய்தி-: இராணுவம் சட்டவிரோத மின்பாவனை உயிராபத்துக்குறித்து மக்கள் அச்சம்;

மயிலர்-: மரணத்தை அறியாதவன் மடியின் உயரத்தை மதிக்கான் பாருங்கோ... மக்களின்ரை உயரத்தை அறியாதவையின்ரை செயல் உது தான் பாருங்கோ...

செய்தி-: பாவனைக்கு உதவாத பொருட்கள் இராணுவச்சந்தையில் கண்டுபிடிப்பு.


மயிலர்-: கஞ்சிக்குலைஞ்சானாம் பஞ்சன் நஞ்சைக்குடுத்தானாம் கஞ்சன் எண்ட கதைதான் பாருங்கோ'

செய்தி-: இலங்கையின் சமாதான நடவடிக்கை பற்றி இந்திய வெளிவிவகார அமைச்சர் மகிழ்ச்சி;

மயிலர்-: வெந்தபுண்ணில் வேல் துளைக்கிற இந்த நாட்டிலிருந்து இப்படி வரும் ஆறுதல் வார்த்தை மகிழ்ச்சி தருதுபாருங்கோ, வெண்ணை திரளுறநேரம் தாழிஉடைக்கிறதுக்கெண்டும் அங்கை சில ஆக்கள் இருக்கினம் தெரியுந்தானே....

செய்தி-: சுன்னாகம் இராணுவ அரணுக்கருகில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு.

மயிலர்-: வேலிக்கு முள்ளு வைச்சால் காலைத்தைக்கும் பாருங்கோ .. அதை எவ்வளவு கெதியா எடுக்கலாமோ அவ்வளவு கெதியா எடுக்கிறது தான் நல்லது;





# சிறைகளின் குமுறல்களும் அரசியல் வாதிகளின் வாக்குறுதிகளும்...:

■ நித்தன்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம்; தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் காலநேரமின்றி அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டுச் சோதனையிடபபட்ட சமயங்களிலெல்லாம் காரணமின்றித் தமிழர்கள் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு பரவலாகக் கைது செய்யப்பட்டுச் சிறைகளிலே தள்ளப்பட்டனர். இவ் அரசியல் கைதிகளின் குற்றங்கள் பதிவு செய்யப்படாமலும், அவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாமலுமே நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்; பதிவு செய்யப்பட்டகுற்றங்களும் உண்மைக்குப் புறம்பாகப் பதிவு செய்யப்பட்டுக் கொடும் வதைகளின் பின்னர் நிர்ப்பந்திக்கப்பட்டு ஒப்புதல் கையொப்பம் பெறப்பட்ட குற்றப் பத்திரங்களை கொண்டவையாகும். பிடித்துச் செல்லப்படும் அரசியல் கைதிகளின் விபரங்களை வெளியிடாது மூடி மறைக்கின்ற அதிகாரிகள். பிடித்துச் செல்லப்படுபவர்களது உறவுகள் தேடிச் செல்கின்ற வேளையில் அவர்களும் சிறைகளில் அடைக்கப்பட்டுத் துன்புறுத்தப்படும் அல்லது உபாதைகளுக்கு உள்ளாகும் அவலமுமேயே நிகழ்ந்து வந்துள்ளது.

காரணமின்றிப் பிடித்துச் செல்லப்படும் தமிழர்கள் விசாரணை என்கின்ற பெயரில் சிறை அதிகாரிகளால் கொடூரமாகத் தாக்கப்படுவதும், காட்டுமிராண்டித்தனமான வதைகளைப் புரிந்து அவர்களைக் கொன்று புதைப்பதும், பேசமுடியாத நிரந்தர ஊமைகளாகவும், பார்வை பறிக்கப்பட்டவர்களாகவும், கேள்விப் புலனிழந்தவர்களாவும், ஊனமுற்ற மனிதர்களாகவும், மனநோயாளிகளாகவும் ஆக்கப்பட்டுள்ளதுடன், ஒரு இளம் சமூகத்தின் வாழ்வு கேள்விக்குறிகளோடு சிறைக்கூடங்களின் கம்பிக் கூடுகளுக்குக்குள் சிக்குண்டு தவிக்கின்றது.

கைது செய்யப்படும் பெண்களிற்பலர் பாலியல் வதைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் ஆளாகியுள்ளனர். இவ்வாறு பாதுகாப்பற்ற சூழலில் 'காட்டு மிராண்டிக்காவலர்களுடன், சிறைகளிலே காலத்தைக் கழிக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளது. ஆடு மாடுகளைப் பட்டியிலடைப்பதைப் போன்று அளவுக்கதிகமான கைதிகளை அடைத்து வைக்கப்பட்ட நிலையிலும் முறையாகப் பராமரிக்காத நிலையிலும் அவர்கள் வாழ்வு துயரில் கழிகிறது. தொற்று நோய்களின் தாக்கம் ஒவ்வொருவரிடத்தும் நாளுக்கு நாள் அதிகரிப்பதுடன் சிறிலங்காச் சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் படும் துயரம் எழுத்திலடங்காததாகும்.

ஆனால் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட சிங்களக் கைதிகள், சகல வசதிகளுடனும், மரியாதையுடனும் நடத்தப்படுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாகச் சிங்களக்காடையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைகளிலே தமிழ் அரசியற் கைதிகளைத் தடுத்துவைப்பதனால் அவர்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்ற இடமுண்டு.

சிறை அதிகாரிகள்; தமிழ்க் கைதிகள் தாக்கப்படுவதற்கும், கொல்லப்படுவதற்குமான சூழ்நிலையைச் சிங்களக் காடையர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து இனவாதத்தைத் தூண்டிவிடும் அரசியல் தலைவர்களிடமிருந்து அற்ப சலுகைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இவர்களுக்குப் பொறுப்பானவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளாமையானது தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவேயுள்ளது.

வரிசைகளில் காத்துநின்று பழுதடைந்த உணவைப் பெற்று உயிர் வாழ்தலை மேற்கொள்ளும் தமிழ் கைதிகள், தாம் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அல்லது விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், தாம் சிறைகளில் படும் இன்னல்களைப் பல அரசியல் தலைவர்களுக்கும், மனிதநேய அமைப்புக்களுக்கும் தெரியப்படுத்தியதோடு, சிறை அதிகாரிகளின் அச்சுறுத்தல்களையும் மீறிப் பலமுறை ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் சிறைகளிலே நடத்தியுள்ளனர்,

இவர்களது விடுதலை தொடர்பாகப் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுப் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன, அரசியற் தலைவர்களும் அவ்வப்போது அவர்களை நினைவூறத் தவறுவதில்லை. இவ்வாறு அவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் நிறுத்தப்பட்டதும் அனைவரும் மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகளாக மாறி விடுவதுதான் இயல்பு. பின்னர் அவர்களது விடுதலையில் எவரும் அக்கறை காட்டுவதுமில்லை கரிசனையுடன் செயற்படுவதுமில்லை.

பல்வேறு மனிதநேய அமைப்புகள் இங்கு செயற்பட்டவாறுதான் உள்ளன. எனினும் இவர்கள் தமிழ் அரசியற்கைதிகளுக்கு இளைக்கப்படுகின்ற துன்புறுத்தல்கள் குறித்தோ, அவர்களுக்கு நேரப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்தோ, அவர்கள் சிறைகளிலே நடத்தப்படும் விதம் குறித்தோ பெரியளவில் அலட்டிக் கொள்வதில்லை. தாமுண்டு தம்பாடுண்டென அவர்களின் போக்குகள் உள்ளன. இவர்களது இந் நிலைப்பாடு தமிழ் அரசியற் கைதிகள் மேலும் துன்புறுத்தலுக்கு ஆளாகவே வழிகோலும்,

சென்றவாரம் களுத்துறைச் சிறையிலும், மட்டக்களப்புச் சிறையிலும், தமக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்று தமிழ் அரசியல் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். களுத்துறைச் சிறையில் எட்டு நாட்கள் வரை போராட்டம் நீடித்தது. மட்டக்களப்பில் மூன்றாவது நாளாகவும் தொடர்கின்றது.

களுத்துறைச் சிறைக்கு அரசியற் தலைவர்களும் முக்கிய பிரமுகர்களும் சென்றார்கள். பார்வையிட்டார்கள், கருணையோடு விசாரித்தார்கள். பிரச்சினைகளை அனுதாபத்தோடு கேட்டார்கள். "மூன்று மாதத்துக்குள் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. வழமை போன்று அவர்களின் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. முன்னரைப் போன்றே இம்முறையும் பலர் மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்கள்:

தேர்தல்காலங்களில் வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுவது வழமையே அவற்றுள் தமிழ்க்கைதிகளின் விடுதலை தொடர்பாகவும்வாக்குறுதிகள் வழங்கப்பட்டே வருகின்றன. ஆயினும் சிறைகளிலுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலையாவதுமில்லை. அவர்களது பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுவதுமில்லை அரசியத்தலைவர்கள் தமிழ்க் கைதிகளின் விடுதலையில் அசட்டுப் போக்குடன் நடக்கின்றனரா? அல்லது மீண்டுமொரு தேர்தல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் வாக்குறுதிகளை வழங்கவேண்டுமென்பதற்காக தமிழ்க்கைதிகளின் விடுதலையில் திட்டமிட்ட இழுத்தடிப்பினைச்செய்கின்றனரா?

கைதிகளை விடுதலை செய்வதற்குச் சிபார்சு செய்துவிட்டு அதற்காக ஒரு தொகையினைக் கையூட்டாகப் பெற்றுப்பணம் சம்பாதிக்கலாம்என்கின்ற சுயநல நோக்கமா? அல்லது "தமிழ் இளைஞர்களின் விடுதலை" என்கிற பிரச்சினையை வைத்துக் கொண்டே ஊடகங்களுக்குப்பேட்டிகள் கொடுத்தே தனிநபர் பிரபல்யத்தை அதிகரிக்கச்செய்யும் கபட நோக்கமா? அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை ஆதரித்துப் பாராளுமன்றத்தில் கை உயர்த்தியமைக்கான எசமான விசுவாசமா?

ஐ. நா. வின் மனித உரிமைக்கான 58 ஆவது மாநாட்டில் பயங்கரவாதச்சட்டத்தின் கொடூரம்பற்றியும், அச்சட்டம் உடன் நீக்கப்பட வேண்டு மென்றும் குரல் எழுப்பப்பட்டுள்ளது. அத்தோடு சிறைகளிலே வாழும் தமிழ் அரசியற்கைதிகளுக்கு நீதிவழங்கப்பட வேண்டும்" என தமிழர் உரிமை மையத்தின் பிரதிநிதி அம்மாநாட்டில் தெரிவித்தார். தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையில் இவ்வாறான குரல்களின் அழுத்தம் ஓங்கி ஒலிக்கப்படுதல் வேண்டும்.

தமிழ் அரசியற்கைதிகளால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வில்லை. மீண்டும் கைதிகளின் போராட்டங்கள் தொடர்கின்றன.

நீண்ட நாட்களாய் உறவுகளைப் பிரிந்து வாழும் இவர்களை-அவர்களது உறவுகளோடுஇணைத்துஅவர்களது எதிர்காலத்தின் நல்வாழ்வுக்கு தமிழ்க்கட்சிகளின்அரசியற்தலைவர்களும், மனித நேயமுள்ள அரசியல் தலைவர்களும் ஒருமித்து அவர்களுக்காய் குரல் கொடுக்க வேண்டும். அத்துடன் தமிழ்க்கைதிகளுக்குக்கொடுத்த வாக்குறுதிகளைநிறைவேற்றிமனித நேயமுள்ள தலைவர்களாக உறுதிப்படுத்திக்கொள்ளவும் வேண்டும். ■

## சங்கடப்படலை

### முத்தமிடக் குத்துமடா முள்

தரும் சிறங்கை நீரில்
தாகமெலாம் தீருமெனும்
பெருங் கனவில் நாளைப் போக்காதே
கருங் குளவி
குத்தாதெனத் தூக்கிக்
கொஞ்சில்; நீயதனை
முத்தமிடக் குத்துமடா முள்.

ஊர்புகுதல் மட்டும்
உரிமையல்ல; ஊரினிலெம்
வேர்பிடிக்கும் வாழ்வே விடுதலையாம்
தேரெடுத்துப்
போகும் நிமிர்வென்றே
பெருமை தரும்; மற்றதெலாம்
காணும் சுமையெனவே காண்.

அஞ்சிப் பயந்தொடுங்கி
அடையாள அட்டைதனைக்
கொஞ்சிக் கிடப்பதல்லக் குடிவாழ்வு
தஞ்ச மென
பகையின் மடியிருத்தல்
பழுதாகும்; முடியணிந்து
அவையிருத்தல் அழகென் றறி.

காவரணன்; வீதிக்
கடவையுடன் பகைதழுவும்
ஆவல் இவையொன்றும் அழகல்ல
வாசலிலே
செல்லும் போதெம்மைச்
செல்லாதே என்றொருவன்
சொல்லாத வாழ்வே சுகம்.

கோடி பணமிருந்தும்
கும்பிட்டு வால்வதெனில்
ஆடிச் சரிந்துவிழும் அந்தரிப்பாம்
பாடி வரும்
சிட்டுக் குருவிகளின்
சீவியத்தைப் போலவொரு
கட்டறுந்த வாழ்வேயெம் கண்.

தமிழீழம் கைவிடுமோர்
சரக்கல்ல; எங்களுயிர்த்
தமிழீழம் எவர்கையும் தருவதல்ல
தமிழீழம்
உயிரில் திரிமூட்டி
உறவுகளின் நெய்யூற்றி
அயலை ஒளியூட்டும் அகல்.



கோணாமலைத் தேசிகர்

இவ்வாறே அவர்கள் போகும் போது மும்முறை கொத்திக்கேட்க இவர்கள் ஒற்றையடிப் பாதையை விட்டு விலகிக்காட்டுக்குள் மறைந்து கொள்கின்றார்கள். அவ்வழியே இருவர் சிங்களத்தில் கதைத்தவண்ணம் செல்கின்றனர்.

முன்னால் சென்றுகொண்டிருந்த வழிகாட்டி, இப்போது ஒரு நீர்நிற்கும் பள்ளம் ஒன்றருகில் நிற்கின்றார். இவர்கள் அவரை நெருங்க அவர் சொல்கின்றார் ''கட்டுத்

# இன்னொரு போர்முகம்

■■■ தூயவன்

துவக்கு வைச்சிருக்கிறாங்கள்'' என்று அதையும் காட்டுகின்றார். ''மரைக்கு வைச்சிருக்கிறாங்கள். தட்டுப்பட்டு வெடிச்சால் சயக்குண்டுகள் வயிற்றையோ அல்லது சற்றுக் கீழயோ நிச்சயம் பதம்பார்க்கும். இதை இப்படியே விட்டுட்டுப்போவம். எடுத்தமென்றால் வீண் சோலி'' என அவர் கூறி விலத்திச் செல்கின்றார்.

இவர்களும் தொடர்ந்து செல்கின்றனர். இவர்கள் சுமார் 250 அடி உயரமுள்ள குன்றுகளை ஏறி இறங்குகின்றனர். மாலை மூன்று மணியளவில் ''பெற்றோலியம் கோப்பரேசன்'' என்னும் இடத்தை வந்தடைகின்றனர். வழிகாட்டி அதனைப்பற்றிக் கூறுகின்றார். இது வெள்ளைக்காரங்கள் எண்ணை நிரப்பிவைக்கக் கட்டினவங்கள். இதில் 107 இருக்கிறது என இரும்பினால் ஆன இராட்சத தாங்கிகளை காட்டுகின்றார். அவை ஒவ்வொன்றும் 30 அடி விட்டமும் 60 அடி உயரமும் கொண்டவையாக இருக்கின்றன. ஒவ்வொன்றினுள்ளும் ஏறி இறங்குவதற்கு படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு தாங்கியையும் சுற்றிவர அதேயளவு உயரத்திற்கு சதுரமாக மண் அணைகள் எழுப்பப்பட்டுள்ளது. தவறி ஒன்றினுள் தீப்பற்றினாலோ அல்லது வெடிப்பு ஏற்பட்டாலோ மற்றவற்றிற்கும் பரவாமல் இருப்பதற்கான முன்னேற்பாடு என்பது வெளிப்படையாக விளங்குகின்றது. 50-60 ஏக்கர்



நிலப்பரப்பில் அவை அமைந்துள்ளது. இங்கு வளர்ந்திருக்கும் சிறு மரங்களும் படர்ந்திருக்கும் பற்றைகளும் மனித நடமாட்டமின்மையை பறைசாற்றிக்கொண்டிருந்தன.

30-40 மண் அணைகள் ஏறி இறங்கி 200 மீற்றர் உயரமுடைய குன்றொன்றில் ஏறுகின்றனர். நேரம் 4.30 மணி என வழிகாட்டி கூறுகின்றார். ''இப்படித்தான் முதலும் இரண்டுபேர் வந்தவையள்... பிறகு நான் அவர்களைக் காணவில்லை. அவர்களுக்கும்தான் இந்த இடமெல்லாம் சுற்றிக்காட்டினான்''. கதைத்தபடியே சாதாரணமாக நடந்து செல்கின்றார். இவர்களுக்கோ மேல்மூச்சு கீழ்மூச்செசன வாங்கத்தொடங்கிவிட்டது. அவரின் உடல் உறுதியை மனதில் வியந்தவண்ணமே தொடர்கின்றனர். மலையில் ஏறியவர்கள் இப்போது சீனன்குடா விமானத்தளத்தைப்பார்க்கின்றார்கள்.

இவர்கள் நிற்பதற்கு தெற்காக சீனன்குடா விமானத்தளமும், மேற்காக தம்பலகாமம் குடாக்கடல் ஏரியும், கிழக்காக பிறிமா மா ஆலையும், துறைமுகமும், வடகிழக்குப பக்கமாகத்திருக்கோணேஸ்வரமும்தெளிவாகத் தெரிகின்றது. மலையில் நின்று அருண் சுற்றிவர பார்க்கின்றான். கோணேஸ்வரம் கோவிலடியில் தொலைத் தொடர்புக்கோபுரம் கட்டப்பட்டிருக்கின்றது. அதில் பொருத்தப்பட்டிருக்கும் பாரிய கோப்பை, மேற்கிலிருந்து வீசும் சூரிய ஒளிபட்டு பழபழக்கின்றது. பலவகைக்கப்பல்கள் துறைமுகத்தினுள் தரித்துநிற்கும் காட்சி கண்களை கொள்ளை கொள்கின்றது. உலகிலேயே பிரபலமான இயற்கைக் காப்பரண்களைக் கொண்ட துறைமுகங்களில இது ஒன்றாகும். இதுவே பல வல்லரசுகளை வரலாற்று ரீதியான பார்வையையும் ஆதிக்கத்தையும் செலுத்தக் காரணமாக இருந்தது எதிர்கால தமிழீழ சுதந்திர அரசின் தலைநகரை எதிரி சுரண்டிக்கொண்டிருக்கின்றான். மேற்படி எண்ணங்களால் சூழப்பட்டவன் அடிவயிற்றிலிருந்து உருவான வெம்மை நிறைந்த பெருமூச்சொன்றை வெளிவிடுகின்றான்.

விமானத் தளத்திற்குப் பின்னால் சீனன்குடா மலை தென்படுகின்றது. தனது கழுத்தில் தொங்கும் இராணுவ பாவனைச்குரிய தொலைநோக்கியை எடுத்து விமானத் தளத்தை அலசத்தொடங்குகின்றான்.

மத்தியில் உயரமான தொலைத் தொடர்புக் கோபுரம், அதற்கு சற்றுப் பின்னால் ஒரு இறாத்தல் பாணின்வடிவில் அமைந்திருக்கும் பாரிய கட்டிடம், தெற்குப் புறமாக ஒரு ''பெல்'' ரக உலங்குவானூர்தி: தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கு மேற்கே இரண்டு வை-12 விமானங்கள். தொலைத் தொடர்புக் கோபுரத்திற்கு முன்னால் உயர்ந்த இடத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பாரிய தேடுதல் ஒளிபாய்ச்சி, அதற்குச் சற்றுத் தள்ளிக் கிழக்கில் நிற்கும் பவள் கவசவாகனம். சிறிது இடைவெளிவிட்டு தொடராக அமைக்கப்பட்டிருக்கும் காவலரண்கள். எல்லாவற்றையும் சுற்றி போடப்பட்டிருக்கும் கம்பிவேலி, எல்லாவற்றிற்கும் முன்னால் 250 மீற்றர் விஸ்தீரணம் கொண்ட பச்சைக் கம்பளம்போல் கண்ணிற்கு இதம்தருவதாய் அமைந்திருக்கும் புல்வெளி, அதற்கும் முன்னால் இரண்டு உபபாதைகளைக்கொண்ட இரண்டரை கி.மீ நீளமான பிரதான விமான ஓடுபாதை, அதற்கு 10 மீற்றர் முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு வீதி. அதற்கு 10 மீற்றர் முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் பண்ட்லைன் (பண்ட்). அதில் 25 மீ இடைவெளிகளில் அமைக்கப்பட்டிருக்கும் காவலரண்கள்...

விமானத்தளத்திற்குக் கிழக்காகச் செல்லும் கிண்ணியாவீதி அதனையொட்டி அமைக்கப்பட்டிருக்கும், பலகாவலரண்களும் பல கட்டிடங்களும் மேற்குப் புறமாகக் காணப்படும் தம்பலகாமம் நீரேரியும், அதனைப் பார்த்தவண்ணம் நேராக அமைக்கப்பட்டிருக்கும் காவலரண்கள் ''பண்ட்'' ற்கு முன்னால் முட்கம்பிவேலி. மேற்படி தகவல்களை அருண் மனனம் செய்கின்றான். அதேவேளை கதிரவன் தனது வீடியோ கமிராவினால் ஒளிப்பதிவாக்கியவண்ணமுள்ளான்

(தொடரும்)

# உன்னை உருவாக்கும்... நீ

## ○ கடமையில் கண்ணாயிரு

நாம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. கடமைகளில் பலவிதம்; அதில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம். இவைதான் கடமையாக இருக்கவேண்டும் என்று வரையறுக்கவும் முடியாது.

கடமையைச் செய்யாமல் தப்பித்துக்கொள்ளவும் முடியாது: கடமையைச் செய்யாவிட்டால் நம்முடைய பொன்னான வாழ்க்கையே வீணான வாழ்க்கையாக முடியும்;

கடமையைச் செய்வதின் மூலமே உரிமையைப் பெற்று நம்முடைய வாழ்க்கையைச் செப்பனிட்டு, செம்மையாக அமைத்துக்கொள்ள முடியும். கடமையில்லையேல் வாழ்க்கை இல்லை என்பதனைக் கட்டாயம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிறுவர் முதற்கொண்டு பெரியவர்வரை, கடமைகள் உண்டு.

தந்தைக்கு குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய கடமை, தாய்க்கு குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய கடமை. தனயனுக்கு கல்வி கற்க வேண்டிய கடமை; தகுதிக்கேற்ப மாறிக்கொண்டே இருக்கும்;

எல்லோருக்கும் கடமை இருப்பதை உணருகிறோம். ஆனால் கடமையினை ஒழுங்காகச் செய்கிறோமா என்பதுதான் கேள்வி.

கடமையைச் செய்யும்பொழுது, பலவித இன்னல், இடையூறுகள் ஏற்பட்டபோதிலும், கடமையை விட்டுவிடக்கூடாது;

கடமையில் கருத்தாக இருப்போமேயானால், ஏற்படும் இடையூறுகள் தானாகவே மறைந்துவிடும்: ''கடமைதான் விதியை நிர்ணயிக்கின்றது'' என்று கிரீஸ் நாட்டுப் பழமொழி கூறுகிறது.

சாமுவேல் ஜான்சன், தன் வாழ்க்கையின் சிறப்புமிக்க இளமையை, இருளிலே கழிக்க வேண்டியதாயிற்று. காரணம் வறுமை.

எனினும் தன்னுடைய வறுமையைப் பற்றிக் கவலையே படாமல் கடமையே பெரிதெனப் போற்றி தன்னுடைய பணியைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். அதன் பயன் பின்பொருநாள் வெற்றி அவரைத்தேடி ஓடி வந்தது.

பெர்னாட்சாவும் தன்னுடைய கடமையைச் செம்மையாகச் செய்ததாலேயே, உன்னத நிலையை அடைய முடிந்தது. மகாத்மா காந்தியடிகளும் தன்னுடைய கடமையைச் செய்து அதன் மூலம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

இவர்களை நாம் முன்னுதாரணமாகக் கொண்டு நம்முடைய கடமையைத் தவறாமல் செய்வதென உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும்.

''மற்றவர்களிடம் நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, அதையே நம்மிடமும் மற்றவர்கள் எதிர்பார்க்கிறார்கள். கடமை என்பது இதுவே'' என்று ஆஸ்கார் ஒயில்டு கூறுகிறார்.

மற்றவர்களிடம் நாம் ஒன்றை எதிர்பார்ப்பது போலவே, நம்மிடம் இருந்து மற்றவர்கள் ஒன்றை எதிர்பார்ப்பார்கள். இதுவே கடமையாகிவிடுகிறது;

கடமையைச் செய்ய என்றுமே பின்வாங்கக் கூடாது. கடமையைச் செம்மையாகச் செய்வதின் மூலமே மற்றவர்களை எளிதில் கவர முடியும்.

கடமையைச் செய்யாமல் சோம்பி இருந்தால், வாழ்வும் வனப்பிழந்து வாடிவிடும் என்று உணர வேண்டும். நம்முடைய வாழ்வும் அறிஞர்களின் வாழ்வைப் போல, சிறப்பாக அமைய வேண்டுமானால், கடமையைச் செய்தே ஆக வேண்டும்.

அறிஞர்கள் தங்களுடைய கடமையைத் தவறாமல் செய்ததாலேயே, மேதைகளாக உயர முடிந்தது. நம்முடைய உடம்பிற்கு நோய் வந்துவிட்டால், நாம்தான் டொக்டரிடம் செல்லவேண்டுமே தவிர, டொக்டர் நம்மைத் தேடிவரமாட்டார். இதை உணர்ந்துகொண்டால் போதும்.

நம்முடைய நோய் குணமாக நாம்தான் மருந்துசாப்பிட வேண்டுமே தவிர, இன்னொருத்தர் சாப்பிடமாட்டார்,

இதேபோன்றதுதான் கடமையும். நம்முடைய கடமையை நாம்தான் செய்ய வேண்டும். யார்யார் தன்னுடைய கடமைகளைச் செய்து முடிக்கிறார்களோ அவர்கள் உயர்ந்த நிலையை எய்துகிறார்கள்.


நம்முடைய கடமையைக் கண்ணியமாகச் செய்துவிட்டால், இனிமையான வாழ்வு கட்டாயம் அமையும்.

கடமையைச் செய்வதால் வரும் இன்பம் அலாதியானது. ஆனந்தம் தரவல்லது! எனவே ஒவ்வொருவரும் கடமையைச் செய்தல் வேண்டும்.

கடமை நம்முடைய உள்ளத்திலும், உடலிலும் ஊறியிருக்க வேண்டும். கடமை நம்முடைய உடைமை என்று மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பதிய வைத்துக்கொண்டால், வாழ்வு எப்படியும் மலர்ந்தே திரும்.

■

-மெர்வின்



## முகமூடி

மனிதா!

உண்மையானமுகத்தை
உலகிற்கு காட்டு
உள்ளத்தை
உருக்குலைக்காதே,
உள்ளன்பை
உணர்ந்து
உன் அறிவை
உரு மாற்றாதே,
உன்நிதர்சனமான முகத்தை
உருமறைப்பு செய்யாதே,
உன் ஆளுமையை
உன் அதிகாரம் என
உளறுபவர்களை எண்ணி
உருகி விடாதே,
உன் திறமையை
உலவ விடு
உன் வழிகாட்டி.
உன்னைபுரிந்துகொள்வான்.

- உமா



சிறுகதை

# முறிவுகள்

அவன் என்னையே பார்த்தான். நானும் பார்த்தேன். அவனாகத்தானிருக்க வேணும். பொக்கற்றுக்குள் கைகளைவைத்தபடி பார்வையை வேறுபக்கம் திருப்பினான்.

''கோபன்...'' கூப்பிட்டேன். அவன் மறுபடியும் பார்த்தான்.

''என்னைத் தெரியேலையே...?'' அவன் பேசாமல் நின்றான்.

''நான்தான் உன்னோட படிச்ச சரன்''

கோபன்கண்களை அகற்றிய படியே நின்றான். பார்வையில் அதிசயிப்பு வளையங்களிட்டன.

கோபனின் அந்தப் பார்வையில், என்னால் எந்த உணர்வையும்புரிந்துகொள்ள முடியவில்லை. இது எனது பலவீனங்களா? என் பலவீனங்களைப்பலபேர் பரீட்சித்துப் பார்ப்பதுண்டு. கோபனும் பரீட்சித்துப் பார்க்கின்றானா...?

முந்பு என்றால் கோபன் என்னைக் கண்டவுடன் கிட்ட ஓடிவருவான். என்ரை கைகளைப் பிடித்து தன்ரை கைகளுடன் வைத்திருப்பான். இப்ப எனக்கும் கோபனுக்கும் இடையில் நிறைய இடைவெளிஏற்பட்டுவிட்டது.

எனது, வெய்யில் உலிந்த ஜீன்சும்- பொத்தல்கள் விழுந்த சேட்டும், புழுதி குடித்த கால்களும்தான் இந்த இடைவெளியை அதிகமாக்கியிருக்கவேணும்?

ச்சாய்!

கோபன் என்னோடுஅப்படி நடக்கமாட்டான். கோபன் நல்லா வளர்ந்து விட்டான். மீசையும் வழித்திருக்கின்றான். கண்ணாடியும் போட்டிருக்கிறான். கொலோனும்மணக்குது. ''சூ''வும் மினுங்குது. பார்த்தால் வெளிநாட்டால் வந்தவன்மாதிரிஇருக்கிறான். தெத்தல் பல்லில் கிடக்கிற மஞ்சள் காவிதான் இன்னும் மறையவில்லை.

கோபன் இன்னும் என்னுடன் கதைக்கவில்லை. கோபனின் பார்வையும் என்னிலிருந்து முறியவில்லை.

''கோபன்...''

''ம்...''

''ஏன் பேசாமல் நிக்கிறாய்''?

''......

''இவளவு காலமும் எங்கை இருந்தனி?''

''அங்கிளோட 'கலம்பில' இருந்தனான். பெரியம்மாவைக் கூட்டிக்கொண்டு போகத்தான் வன்னிக்கு வந்தனான்''

கூடாரமடித்த வாகனம் ஒன்று கோபனின் மிகுதிச் சொற்களை நொருக்கிவிட்டுச் செல்கிறது...

கிரவல் றோட்டுப் புழுதி ''எல்வ்''வின் புகையோடு சேர்ந்து சுருள் சுருள்களாக எழுந்து அவதிப்பட்டு மடிகிறது. கோபனால் மூச்செடுக்க முடியவில்லை. கோபன் திணறிப்போனான். நான் மூக்கை கைகளால் பொத்தினேன்.

கோபனுக்கு, புழுதி நுவரெலியா பனிமூட்டத்தை விட கொடியதாய் இருந்தது. ''எல்வ்''வின் மேல் கோபனுக்கு எரிச்சல் வந்தது. சினத்தோடு ''எல்வ்'' வைப் பார்த்தான். ''எல்வ்'' பள்ளமொன்றில் விழுந்து உன்னிநின்றது உடைந்து தூக்கிய ''எல்வ்''வின் பின்கதவொன்று உன்னலுக்கு சடக்...சடக் என்ற சப்தத்தைக் கிளப்பியது.

புழுதி உட்செல்ல விடாமல் கட்டப்பட்ட சாக்குகளை விலத்திப்போட்டு ஐந்தாறு பயணிகள் கழுத்துகளை நீட்டிக்கொண்டிருந்தார்கள். அச்சுவேலி முடக்கன் சந்தி ''கிரேஷர்'' தொழிலாளர்களின் தலைகள் மாதிரி பயணிகளின் தலைகளில் புழுதி படிந்திருந்தது.

ஜாஎல மிருகக் காட்சிச் சாலைக்கு ''எல்வ்'' வாகனங்களில்தான் மிருகங்களைக் கொண்டு செல்வார்கள். அது என்ன பியூட்டி... அதுகளும் இப்படித்தானே தலைகளை நீட்டுகிறதுகள்...

கோபனால் இந்த வாழ்க்கையை ஜீரணிக்க முடியவில்லை.

''சரன்...''

''ம்...''

என்னென்டு இஞ்சை வாழுறாய்?''

நான் கோபனைப்பார்த்துச் சிரித்தேன். இந்தச் சிரிப்பை கோபன் ஒரு சலிப்பின் சிரிப்பாக நினைத்திருக்கக் கூடும். கோபங்கள், கொதிப்புக்கள், கிறல்கள் கிழிவுகள், தீச்சுவாலைகள் இருக்கும் எந்தமுகங்களையும் சிரிப்பால் அடக்கலாம்.

''சிரிப்புஎன்பதுஒருநார்ப்பு'' சொக்கண்ணா எனக்கிதை அடிக்கடி சொல்லுவார். எனக்கு கோபனை நினைக்க அந்தச் சொக்கண்ணாவின் ஞாபகம்தான் வருகிறது...

அப்ப நாங்கள் யாழ்ப்பாணத்தில்...

அப்ப எனக்கும் கோபனுக்கும் பத்துவயது. நாங்கள் ரண்டுபேரும் ஒன்றாகத்தான் படிச்சனாங்கள்.

நான் பள்ளிக்கூடம்போக கோபன் 'நல்லையா' வாத்தியார் வீட்டு பனம்காணியிக்கை நிப்பான். பட்ட பனைப் பொந்துகளுக்கை கிளி பிடிச்சுக் கொண்டு வருவான். தென்னங்கிளிக்கு கழுத்திலை வரிஇருக்குமாம். பனங்கிளிக்கு வரி இருக்காதம். ஒரு கிளி பத்து ரூபாவுக்கு விற்பான். மயிர்முளைக்காத குஞ்சுகளுக்கு ஐந்து ரூபா வாங்குவான்.

மேலில் சேட்போட மாட்டான். காற்சட்டை மட்டும் கட்டியிருப்பான். பொத்தான்கள் இல்லாமல் காற்சட்டை அவிழ்ந்து அவிழ்ந்து விழும். பொத்தல்கள் விழுந்த பின்பக்கத்தில் நான் கடதாசிகளை மடித்து ''தபால்'' என்றுபோடுவேன். கோபன் அடிக்க என்னை விட்டுத்துரத்துவான்.

ஆட்டுக்குட்டிகளுக்கு வால்களில் காவோலைகளைக் கட்டிவிடுவான். ஆட்டுக் குட்டிகள் வெருண்டுபட்டு ஓட தானும் துரத்திக்கொண்டு ஓடுவான்.

ஒரு நாள் ஆட்டுக்குட்டியை துரத்திக்கொண்டு ஓடத்தான் சொக்கண்ணா கோபனைக் கண்டார். கோபனைக் கண்டதும் சொக்கண்ணா சிரித்தார். சொக்கண்ணா சிரித்தார் என்றால் அவர்கள் சொக்கண்ணாவுக்குப் பிடித்தவர்களாக இருக்கும். சொக்கண்ணாவின்ர சிரிப்பிலை கோபன்ர மனம் ஒட்டியிருக்கவேணும். கோபன் அப்படியே நின்றன்.

ஆட்டுக்குட்டி ஓடிக்கொண்டே இருந்தது...

''தம்பிக்கு என்ன பேர்?''

''கோபன்''

''எத்தனையாம் வகுப்பு படிக்கிறியன்?''



''அய்ந்து''

''இன்டைக்குப் பள்ளிக்கூடம் போகேலையே?

''இல்லை''

''ஏன் போகேலை...''

''...

கோபன் பேசாமல் நின்றான். சொக்கண்ணாவுக்கு கோபனின் நிலை விளங்கி விட்டது? கல்வி. எதிர்காலம் பற்றி கோபன் சிந்திக்கும் வயதா இது? சொக்கண்ணா கோபத்தை பெற்றோர்கள் மேல் எறிந்தார்.

''கோபன், இனி நீ பள்ளிக்கூடம் போகாமல் நிக்கக்கூடாது. படிச்சு நல்ல உத்தியோகமபாக்கோணும்; என்ன?''

சொக்கண்ணா கோபனின் கன்னங்களை கைகளால் அள்ளிவிட்டுச் சென்றார்.

அடுத்தநாள்சொக்கண்ணா சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். மேலில் சேட்போடவில்லை. மேல் எல்லாம் சேறு அடித்திருந்தது.

போக்கடிக்குளம் கனகாலமாக தோண்டாமல் இருந்தது. போனவருசக் கோடையில்குளத்தில்தண்ணி இல்லை? மாடுகள் தண்ணிக்கு அலைஞ்சதுகள். சொக்கண்ணா ஒவரு நாளும் காலையில் குளத்தைப்போய் தோண்டுவார். இப்பவும் தோண்டிப்போட்டுத்தான் வாறார்.

''சொக்கண்ணா...''

''என்னடா?''

''நானும் வாறான் சைக்கிளிலை''

சைக்கிளை சொக்கண்ணா நிறுத்தினார். நான் ஏறியதும் சொக்கண்ணா சைக்கிளை எடுத்தார்.

சொக்கண்ணா வழமையை விட சைக்கிளை வேகமாக ஓடினார். சொக்கண்ணா குளித்துவிட்டு ஆலடி வாசிகசாலைக்குப் போக வேணும்.

இன்டைக்குவாசிகசாலைக் கூட்டம். புதிய நிர்வாகத் தெரிவு. கனநாளாக பேப்பர் வராமல் வாசிகசாலை பூட்டியிருந்தது. சொக்கண்ணா நிர்வாகத்தில் இணைந்து வாசிகசாலையை நல்லபடியாய் இயக்கப்போறார்.

சொக்கண்ணா சைக்கிளை நிறுத்தினார் - நிறுத்தேக்கை கேட்டார்.

''நீ இன்டைக்குப் பள்ளிக்கூடம் போனனியோ?''

''போனனான்''

''கோபன் வந்தவனே...?''

''வரேலை''

ஏன் வரேலை?''

''வீட்டிலை சரியான கஷ்டம்''

''தேப்பன் என்ன வேலை செய்யிறார்?''

''தேப்பனில்லை. பொம்பர் அடிச்சுச் செத்துப்போனார்''

அப்பதான் தெரிந்தது கோபன் கங்காணியாற்ற பேரன்என்றுகங்காணியாரை நினைக்க அந்த வைரவர் கோயில் பொங்கல்தான் சொக்கண்ணாவுக்கு ஞாபகத்தில் வருகிறது...

வைரவர் பொங்கல் என்றால் கங்காணியாரை கோவிலில் காணலாம். வெள்ளை வேட்டியை கங்காணியார் முழங்கால் வரைக்கும் மடிச்சுக் கட்டியிருப்பார். நெற்றியில் மூன்றுகோடு விபூதி அப்பியபடியிருக்கும். சங்கிலியின் புலிப்பல்லு பொக்குள் முகப்பை உரஞ்சியபடியிருக்கும்.

வருடாவருடபொங்கலுக்கு கங்காணியார்தான் வைரவர் வாசலில்வளந்துவைக்கிறவர். வளர்ந்துப் பானை பொங்கிச் சரிச்சபிறகுதான் மற்றவர்கள் பொங்கத்தொடங்குவார்கள்

பூசாரியாருக்கு கலை வந்தாலும் கங்காணிமாருக்குத்தான் வேப்பங்குழையளால் தலையில் அடிப்பார்.

அப்ப கூப்பன் காலம். அரிசிக்குச் சனங்கள்கூப்பனை அடுக்கி வைத்துவிட்டுகியூவில் நிக்குங்கள். கங்காணிமாரைக் கண்டால் மனேச்சர் முன்னுக்கு காங்காணிமாருக்குச் சாமானைக் குடுத்துவிடுவார்;

கருணை ரவி

ஆஸ்பத்திரி என்டால் என்ன தியேட்டர் என்டால் என்ன, கள்ளுக்குதவென்டால் என்ன காங்காணிமாருக்குத்தான் முதலிடம்.

சொக்கண்ணாவுக்கு சரியான கோபம். கங்காணிமாரும் எங்களை மாதிரித்தானே சாதாரண மனிதர்? எங்களைவிட அவரை ஏன் உயர்த்திப் பார்க்கின்றார்கள்? வேலைத்தளங்களுக்கு மட்டும்தானேகங்காணிமார், நாங்கள் சமூகத்திலையும் அப்படி ஒரு அந்தஸ்தை

## தணல்பூத்த தாகம்



ஒரு பெட்டகவலு
தூக்கத்தை எங்கோ பாழ்வெளிக்குள் தள்ளியது

உடல் முழுக்கத் தாகம்
அறையில்
ஒரு சொட்டுத்தண்ணீரும் இல்லை

நீரில்லாத காற்று
வன்மமாய் வீசுகிறது
கிணறுகள் வற்றிவிட்டன
மூடர்கள் பெருகி
ஊருக்குள்
வாய்க்கால்களை மறைந்து
குளங்களையும் மூடிவிட்டார்கள்

நீர்க்காகங்கள் எங்குபோயிருக்கும்
கொக்குகள் நீர்ச்செடிகள் எல்லாமும் கூட

இனியொரு பூவைக் காண்பதரிது
ஒரு பசிய இலையைக் காண்பதும் அபூர்வம்
மயானத்தின் நிழல் விரிய
ஊரின் முகம்
ஆந்தையினுடையதைப் போல மாறிவருகின்றது

இரவிரவாக வெள்ளிகள் விழுகின்றன
எந்த வெள்ளியும்
வானமுயில் விழுந்து தங்கமாகவில்லை.

எங்கும் கண்ணடிக்க முடியாமல்
தவிக்கிறார் மாமா.

புழுங்கும் அறையில்
தண்ணீருக்கு வழியுமில்லை
வாசிக்க விளக்குமில்லை

பனைகளில்லாத ஊரில்
ஆறு வருடங்கள்
நீறுபூத்துக்கிடக்கிறோம் நாமெல்லாம்.

**கருணாகரன்**

அவர்களுக்குகொடுப்பதனால் தானே சமூகத்தில் உயர்வு தாழ்வுகள் இளைகள் எறிகின்றன. சொக்கண்ணா நிகழ்வுகளை நினைத்து தனக்குள்ளே குமைந்தார்:

அன்றும் வைரவர்பொங்கல்; வைரவரில் இரவு தான்பொங்கல் நடக்கிறது. சரியாக மாலை ஆறுமணிக்கே வளந்தப் பானை ஏறிவிடும். வழமையாகவளந்து வைக்கும் கங்காணியார் எட்டு மணியாகியும் கோயிலுக்கு வரவில்லை. சனங்கள்பார்த்து பார்த்து இளந்தனர். இப்படி எந்தநாளும் கங்காணியரை சனங்கள் சினக்கிறேலை. சனங்களில் எழுகிற எரிச்சல்களை நினைக்க சொக்கண்ணாவுக்கு கோபம் உச்சிக்கு ஏறியது.

''வேறை ஆராவதுவளந்தை வையுங்கோ கங்காணியார் தனக்கு ஏற்றநேரம் வந்து வளந்து வைப்பர், அதுமட்டும் நாங்கள் காவல் இருக்ககோணுமே?''

''அதுதானே-கோயில் அவருக்கெண்டு எழுதியாச்சே? வேறை ஆரும் வளந்து வைச்சல் வைரவக் கிழவன் என்ன கோவிக்கப் போராறே?''

காங்கேசுக்கிழவனும் சொக்கண்ணாவுக்காகப் பேசினார்.

''கங்காணியார் மம்மல் பொழுதுக்கையே மூரியளும், பாளையள், பன்னாடை எண்டு அடுக்கிப்போட்டு போட்டார். வேறை ஆரும் வளந்து வைச்சால் அந்த மனிசன் என்ன நினைக்கும்?

வள்ளிக்கிழவி எதிர்ப்புக்குரல் காட்டினாள்; கடைசியா கங்காணியார் வந்து பார்க்க காங்கேசுக்கிழவன் வளந்தை வைச்சுக்கொண்டிருந்தார். சொக்கண்ணா நெருப்பை மூட்டிக்கொண்டிருந்தார்: கங்காணியார் அன்று பெரிய சண்டையே போட்டார்; இதுக்கெல்லாம் சொக்கண்ணாதான் கால் என்று கூடுதலான சனங்கள் பேசிச்சிது. சொக்கண்ணா எதையும் காதில் விழுந்தவில்லை. இனியும் பிரச்சினைகள் வரக்கூடாது என்று அடுத்த பொங்கலுக்கு சொக்கண்ணா கோயிலுக்கு ஒருநிர்வாகத்தைதெரிந்தார். சொக்கண்ணா மூட்டிய நெருப்பாலை இப்ப கோயிலிலை ஆரும் வளந்து வைக்கலாம்.

சொக்கண்ணாவின் நெஞ்சில் ''பொம்பர் அடிச்ச...'' அந்த வார்த்தைகள் முட்களாய் குத்தியது. சைக்கிளை எடுத்தார்...

2

ஒரு காலை நேரம்...

சொக்கண்ணா கோபன் வீட்டுப்படலையில்சைக்கிளை நிறுத்தினார். சொக்கண்ணாவைக் கண்டதும் கோபன்சிரித்தபடி ஓடிவந்தான்.

''காலைவணக்கம் கோபன்''

சொக்கண்ணா சிரித்தார்.

''குட்மோனிங் எண்டு சொலலுங்கோ சொக்கண்ணா''

சொக்கண்ணா சிரிககவில்லை.

''வீட்ல ஆர் நிக்றது?''

சொக்கண்ணா சாதாரணமாய்க் கேட்டார்.

''அம்மா பனம்பழம் பொறுக்கப்போட்டா''

சொக்கண்ணா சைக்கிளில் இருந்த ஒரு பாசலை எடுத்துக்கொடுத்தார்:

''என்னண்ணை இது...?''

''கொப்பியளும் பேனையளுமிருக்கு: ஒழுங்காய் பள்ளிக்குடம் போகோணும்''

''...

''ஏன் பேசாமல் நிக்றாய்?

''நான் பள்ளிக்குடம் போகமாட்டன்''

''ஏன்?''

''சேட்டில்லை''

சொக்கண்ணா கொஞ்ச நேரம் பேசாமல் நின்றார்: ''பொம்பர்'' கண்களுக்குள் வந்துகொண்டிருந்தது. அதன் பேரிரைச்சல்களில் நிலம அதிர்ந்து கொண்டிருப்பதாய் உணரமுடிந்தது. அந்த அதிர்வு நினைவுகள் சுழன்றடிக்க சொக்கண்ணா சைக்கிளை எடுத்தார்.

சொக்கண்ணா எடுத்துக்கொடுத்த புதுக்காற்சட்டை, புதுச்சேட், புதுக்கொப்பிகள், புதுப்பேனைகளோடு கோபன் ஒவ்வொருநாளும் பள்ளிக்குடம் போகிறதைப் பார்த்து சொக்கண்ணா சந்தோசப்பட்டார்.

ஒருநாள் காலை மண்ணெண்ணைப் பரல்கள் வானத்திலிருந்து கொட்டுப் படுவதுமாதிரி சத்தங்கள் பெருததுக்கொண்டு வந்தன. கோடி சில்வண்டுகளை எழுப்பும் சத்தங்களைவிட கூடுதலான கொடிய சத்தங்கங்கள் வானத்தைத் தின்று கொண்டிருந்தன. ஊர் உழப்படுவதாய் எல்லாச் சனங்களும் ஊரைவிட்டு ஓடினாகள். நாங்களும் ஓடிப்போய் ஒரு திட்டிக்கு மேல் நின்று ஊரைப்பார்த்தோம்: ஊர் எரிந்துகொண்டிருந்தது. அந்த நெருப்புத் திக்கைகள் நீண்டு நீண்டு வந்தன. அந்த நீண்டுவரும் தீச்சுவலைகளிலிருந்து சத்தம் பெருகிக் கொண்டு வந்தது: அந்தச் சத்தம் எங்களை விரட்டியது;

அந்தப் பெருகிய சத்தம் என்னையும் கோபனையும் சொக்கண்ணாவையும் பிரிச்சுப் போட்டுது.

3

''சரன்...''

''ம்...''

''நீ படிக்கிறியே...?''

''இல்லை''

''ஏன்...?''

''கிபிர் அடிச்சு அப்பா செத்துப்போனார்''

கோபன் மௌனமாய் நின்றான். அந்த மௌனத்தில் எனது பழுத்த ஜீன்சும், பொத்தல விழுநதசேட்டும் எனது வறுமையை உணர்த்தியிருக்கும். ஆனால் கோபன் தனது பத்து வயது வாழ்வை நினைத்துப் பார்ப்பபானா?

நிலவுகின்ற இந்த மௌனம் உடைவதாயில்லை. கோபன் இந்த மௌனத்தைநொருக்கி இருவருக்கமான இடைவெளிகளைத் தூர்த்து ''சரன்...'' என்று என்னைக் கட்டிப்பிடிக்க நான்போடும் அவகாசம் போதாதா?

தூரத்தில் ''எல்வ்'' வாகனம ஒன்று வந்துகொண்டிருந்தது. ''ரொக்கற்'' கக்கும புகைகளால்வானம் மறைவது மாதிரி புழுதிகள் வானத்தின் பின்னால் எழுந்தன. பின்னால் தெரிந்த மரங்கள், மனிதர்கள் எல்லாவற்றையும் புழுதிகள் தின்றுகொண்டிருந்தன;

கோபன் லேஞ்சியைஎடுத்து முகத்தைப் பொத்தினான்.

''கோபன் நான் சொக்கண்ணாவை தேடிப்போறன். சொக்கண்ணா வந்தார் எண்டால் இந்த றோட்டில இப்படிக் கிடங்குகள் இருக்காது. ஒவ்வொரு நாளும் மண்போட்டுக் கொண்டிருப்பார். புழுதியளுக்கு தண்ணி தெளிச்சுக்கொண்டிருப்பார்; குளங்கள் தூந்துபோகாது. மாடுகள் ஆஸ்பத்திரியளுக்கை போகாது. வாறியா கோபன் சொக்கண்ணாவிட்டை...?''

''சொக்கண்ணா எங்கை இருக்கிறார்?''

''சொக்கண்ணாவை இப்ப ஒருதரும் கவனிக்கிறேலையாம் சொக்கண்ணா ஒரு கோயிலிலை இருக்கிறாராம்; ஒவ்வொரு நாளும் மணியடிக்கிறவராம். வாவன் சொக்கண்ணாவிட்ட போவம்...''

''பஸ் வருகுது-இனிவிட்டாக் கஷ்டம்''

கோபன் சாதாரணமாய் செல்லிவிட்டு பாய்கைகத் தூக்கினான்,

கோபன் பஸ்சில்ஏறும்வரை நான் நிற்கவில்லை. நான் சொககண்ணாவிடம் போனன். கோபனின் காலடிகள் என்கால்களுக்குள் மிதிபட்டன. ■

## அவர்களின் வருகையும் அடுத்துவரும் நாட்களும்


அவர்கள் வருவார்கள்
எங்களின் விடுதலை சுமந்து
அவர்கள் வருவார்கள்
பூ விதழ் மெல்ல விரிந்து
புன்னகை உதட்டில் பூக்க
கண்களில் ஒளி தெறித்து
கதைகள் பல பேச
உள்ளத்தின் வெள்ளை
நிலாமுகத்தில் ஓவியம் தீட்ட
அவர்கள் வருவார்கள்.

பொய்முகங்கள் திரை கிழித்து
பொடிப்பொடியாகும்
கட்டாக்காலியாகி எங்கும் நுழைந்த மாடுகள்
பட்டியோடு தூரதேசம் போகும்
கட்டாக்காலிகளோடுவந்தவர்கள்
அதற்குமுன்னே

பெட்டி படுக்கையோடு புறப்படுவர்
அம்மணமாய் சந்திகளில் தொங்கும்
அம்மணிகள் படம் இருந்த சுவடழிந்து போகும்
கசிப்பும் சிட்டுக்குருவிகளைப் புசிப்பதும்
நசிந்து நாராகிக் கிழிந்து கிடக்கும்.

அர்ப்பணமானவர்கள் கல்லறைகள் துளிர்க்கும்
வெள்ளைச் சிருடைகள்
உள்ளத்தில் உவகை பொங்க வரும்
கள்ளமில்லாப் பிஞ்சுகள்
மெல்லப் பாட்டிசைத்துப் போகும்
இரவுகளும் பகலாகி
இனி எங்கள் காலமென
இரை மீட்கும்;

**ஆ.ந. பொற்கோ**



# என்னை வடிவமைப்பது என் கவிதைதான்

மஹ்மூத் தார்விஷ்



மஹ்மூத் தார்விஸ் பாலஸ்தீனத்திலுள்ள பிக்வா என்ற கிராமத்தில் 1941இல் பிறந்தார் 1948இல் ஏகாதிபத்திய இஸ்ரேல் அரசு உருவாக்கப்பட்ட பின்னர் அவரது கிராமம் தரைமட்டமாக்கப்பட்டது, அவரது குடும்பத்தினர் முதலில் லெபனான் நாட்டிற்குத் தப்பியோடினர், பின்னர் இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் உள்ள 'ஜலீலி' என்ற நகருக்குத் திரும்பிவந்தனர்: தனது 19 வது வயதில் தனது முதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். தார்விஷ் மிக விரைவில் உலகளாவிய அங்கீகாரம் பெற்றார் ஆப்பிரிக்கஆசிய எழுத்தாளர் சங்கத்தின் புகழ்பெற்ற தாமரை விருது அவருக்குக் கிட்டியது. 1971பெப்ரவரியில் அவர் கெய்ரோவுக்கே குடிபெயர்ந்தார்- 1972இல் பெய்ரூட்டிற்குச் சென்று பீ-எல்-ஓ வின் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்றார்- 1982ல் லெபனான் மீது இஸ்ரேல் படையெடுத்துபல்லாயிரக்கணக்கானலெபனானியர்களையும் . பாலஸ்தீனியர்களையும் கொன்று குவித்தபிறகு தார்விஷ் ஒரு நாடோடிப் பாடகராக பாலஸ்தீன விடுதலையைப் பாடும் பாணராக பாலஸ்தீனவிடுதலை அமைப்பின் நல்லெண்ணத் தூதராக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பயணம் செய்துகொண்டிருந்தார்-இருக்கிறார்

இலண்டனிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் AFRAR EnQulry என்ற ஏட்டிற்கு 1986 ஜனவரி இதழிற்கு தார்விஷ் வழங்கிய பேட்டியிலிருந்து சில பகுதிகள்

**ஏகாந்தி என்றும் நழுவல்வாதி என்றும் சில சமயங்களில் நீங்கள் வர்ணிக்கப்படுகின்றீர்கள். அவற்றில் ஏதேனும் நியாயம் உண்டா?**

0 என்னிடம் ஏதோ ஒரு அளவு மெத்தனம் இருக்கிறது செல்வந்தர்களுக்கு வரும் நோய் இது. ஆனால் நானோ செல்வந்தன் அல்லன். எந்தவொரு குறிப்பிட்ட மண்ணோடும் எனக்குப் பந்தம் இல்லாமல் போய்விட்டது. அந்த தொப்பூழ்க்கொடி துண்டிக்கப்பட்டுவிட்டது எனவே எந்தவொரு பிரச்சினையுமின்றி ஒரு இடத்தை மணம் புரிந்து கொள்ளவோ அல்லது விலக்கி வைக்கவோ என்னால் முடிகிறது.

**பெய்ருட்டில் நீங்கள் வாழ்ந்தகாலத்தில் நீங்கள் சிரத்தை குன்றியும் மெத்தனமாகவும் இருந்ததாகக் கூறப்படுகிறதே?**

0 இந்த எண்ணத்தை ஏற்படுத்தியவன் நானேதான். விரக்தி, அராஜகம் ஆகியவற்றின் குழந்தைநான். பெய்ருட்டில் நான் நடிகனாகவே இருந்தேன்.

**அப்படியென்றால் உங்கள் கவிதையைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

0 என்னை வடிவமைப்பது என் கவிதைதான். அது ஒரு பெரிய விசயமல்ல வேதனையிலிருந்து பிறந்த விளையாட்டே அது. அதில் நையாண்டித்தனம் மிகுந்திருப்பதைக் காணலாம்.

**அப்படியானால் வாழ்க்கை பற்றிய இந்தப் பார்வையுடன் கவிதை எவ்வாறு பொருந்திப்போகிறது?**

0 குறிப்பிட்ட கவிதைபாணி அல்லது கவிதை மரபு என்ற அளவில் கவிதையானது கவிதையை உருவாக்குவதில்லை. உருவாக்க முடியாது ஒரு குறிப்பிட்ட கவிதை மரபிற்கோ அல்லது இலக்கிய கோட்பாட்டிற்கோ கட்டுண்டு கிடக்காமல் வாழ்க்கையை நேரடியாக சுதந்திரமாக எதிர்கொள்வது அவசியம். இயற்கைக்கும் கலைக்குமுள்ள உறவைப் பற்றி நாம் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம்: ஆனால், முடிவாக கவிதை என்பது நமது பிரக்ஞையைக் கட்டவிழ்த்து விடுவதுதானா கவிதைகள்தான் பாணியையும், மரபுகளையும் உருவாக்குகின்றனவே தவிர பாணிகளும் மரபுகளும் கவிதைகளை உருவாக்குவதில்லை.

**இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழுள்ள பாலஸ்தீனத்திலுள்ள உங்கள் குடும்பத்தினருடன் உங்களுக்குத் தொடர்புண்டா?**

0 எனது குடும்பம் முழுவதுமே இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழ்தான் வாழ்ந்து வருகின்றது. நாடு கடந்து வாழவேண்டியவர்களுக்கு எஞ்சுவது தாய்நாட்டிற்கான ஏக்கம்தான். ஆனால் திரும்பிச் செல்ல எனக்குத் தெரியும். இல்லை. ஒருவேளை நான் அங்கு திரும்பிச்சென்று உயிரோடு இருப்பது சாத்தியமானாலும் கூட அங்கு வாழ்வதில் அர்த்தம் இல்லை: இருந்தாலும் எனது சகோதரர்களும், சகோதரிகளும் அங்குதான் வாழ்கிறார்கள். என்னால் அவர்களை மீண்டும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. என்னால் முடிந்தது எல்லாம் ஏதாவதொரு நாட்டில் சௌகரியம் கிட்டும்போது அவர்களுடன் தொலைபேசியில் பேசுவதுதான். எனது நாட்டைவிட்டு வெளியேறுவது என்பது எனது வாழ்வை சுக்குநூறாக உடைத்தது. இது எனக்கு மட்டும் நேர்ந்த விதியல்ல. நீங்கள் சொல்லலாம்; பாலஸ்தீனியர்களின் போராட்டமே சுக்குநூறாக உடைந்துபோனவற்றை ஒன்றுதிரட்டி ஒன்று சேர்க்கும்முயற்சிதான் என்று - இந்தப் பொருளில் தான், எனது குழந்தைப் பருவம் என்பது தனிப்பட்ட ஒருவனின் கதையல்ல. மாறாக அது ஒரு சமுதாயத்தின் கதை. பாலஸ்தீனம்தான் எனது குழந்தைப் பருவம். எல்லாப் பாலஸ்தீனியர்களுக்குமே அது அப்படித்தான். ஆனால் அது எங்களால் மறுபடைப்புச் செய்யவேண்டிய உலகமே தவிர - தொல்கதைத்தன்மை பெற்றுவிட்ட ஆண்டலாசைப்போல் (இன்று ஸ்பெயினில் ஆண்டலேசியா என அழைக்கப்படும் பகுதி அது பல நூற்றாண்டுகளுக்கு முன் AL Andalnus என்ற பெயரில் நிலவிய ஒரு இஸ்லாமிய ஆட்சிப் பகுதியாகும் கல்வி அறிவியல் - கலை முதலிய தழைத்தோங்கிய இந்த முஸ்லிம் அரசு பின்னர் கிறிஸ்தவ - ஐரோப்பிய மன்னர்களால் கைப்பற்றப்பட்டது) ஒரு இழக்கப்பட்ட சொர்க்கம் அல்ல. பாலஸ்தீனம் ஒரு நினைவுமட்டுமல்ல... அது ஒரு யதார்த்தம். அது கடந்த காலம் மட்டுமல்ல... வருங்காலமும் கூட.... எனக்கு ஆறு வயதாக இருக்கும்போதே கூடாரம், செஞ்சிலுவைச் சங்கம் - அனர்வா (Onrwo United nations Reju-gee Seruiee For Polostinlans) போன்ற சொற்களை நான் கற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. நான் குழந்தையாக இருந்தபோது என்னை வந்து தாக்கிய பெருங்கற்கள் தாம் இச்சொற்கள். ஆனால் இந்தசொற்கள் தாம் என்னைக் கவிதைக்கு இட்டுச்சென்றன. எனது தேசியத் தன்மை பற்றிய உணர்வை ஏற்படுத்தின. நான் ஒருஅராபியன் என்று உணர வைத்தன... அதே சொறகள்தாம் என்னை நாடு கடந்து செல்ல வைத்தன... அதற்கான வேளை வந்தபோது.

**தேசியத் தனித்தன்மைபற்றி நீங்கள் கூறினீர்கள். மதம் தரும் அடையாளம் பற்றி?**

0 எனது குடும்பம் ஒரு முஸ்லிம் குடும்பம்தான். ஆனால் நானோ பல மதங்கள் பன்நூறு ஆண்டுகளாய் சகவாழ்வு நடத்தும் பாலஸ்தீனத்தில் பிறந்தவன். பாலஸ்தீனமானது எப்போதுமே முஸ்லிம்-கிறிஸ்தவ- யூத நாடாகவே இருந்துவந்துள்ளது. அங்கே இருந்த மதங்கள் எல்லாவற்றிற்கும் இடமுண்டு. நான் மதம் சார்ந்த தனித் தன்மையையும் அடிப்படை வாதத்தையும் நிராகரிக்கின்றேன்.

**உங்களுடைய வாழ்வு விடுதலைப் போராட்டத்தாலும் கவிதையாலும் வரையறுக்கப்பட்டுள்ளது: கலைக்கும் போராட்டத்திற்குமிடையே பிணைப்பை எவ்வாறு ஏற்படுத்துகிறீர்கள்?**

0 இதற்கு எனது சுருக்கமான பதில்; ''எனக்குத் தெரியாது'' என்பதே. போராட்டம் என்பதற்கு அதற்கே உரிய அழகும் அழகியலும் உண்டு எனநான் கருதுகிறேன்: பொறுப்பற்ற முறையிலோ அல்லது என்னை நானே வருந்திக்கொள்ளும் முறையிலோ நான் இப்படிச் சொல்லவில்லை. விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள்கள் மிகவும் அழகானவைகள் தாம்; ஏனெனில் விடுதலையைப் பெறும் சந்தர்ப்பத்தை போராளிக்கு அவை வழங்குகின்றன. அதே சமயம் போராட்டத்தில் ஏற்படும் பண்புகளுக்குரிய ஒரு அழகியலும் உண்டு. ஒருவகையில் போராளியின் வாழ்வே ஒரு அழகிய கனவைப் போன்றது. எனலாம். கனவிலிருந்து விழித்தெழுதல் என்பது விடுதலையை அடைவது தான்.

கவிதையும் போராட்டமும் சரிசமமானவையல்ல. எதிர்ப்பைப் பற்றிய கவிதை எதிர்ப்பைக் காட்டிலும் ஒருபடி மேலோங்கியதாக இருக்கவேண்டும். ஒவ்வொருபாலஸ்தீனியனின் மூச்சும்- அது பாலஸ்தீனத்தைப் பற்றி இருப்பதால் மட்டும் கவிதையாகிவிடாது. எதிர்ப்புக்கும் கவிதைக்கும் இடையில் ஓர் உறவுண்டு. ஆனால் சமத்துவம் இல்லை. கவிதை படைக்க எங்களைத் தூண்டியது எங்கள் சூழ்நிலையே. ஆனால் நாங்கள் கவிதைகளைப் படைப்பது எங்கள் அவலத்தை வெளிப்படுத்துவதற்கல்ல. ஏத்தீனியர்களுக்கும் (பண்டைய கிரேக்க தலைநகரான எதென்ஸ் நகரவாசிகள்) எங்களுக்குமிடையே உள்ள வேறுபாடு இதுதான். அவர்களது அவல நாட்களில் காணப்படும் அவலம் யதார்த்த உலகின் அவலம் அல்ல. எங்களைப் பொறுத்தவரை யதார்த்தம் என்பதே ஒரு அவலம்தான். எமது மக்கள் அனைவருக்கும் ஏற்பட்ட அவலம்தான்: அவர்களைப் போலவே அவர்களது துயரங்களும் அங்கீகரிக்கப்படவில்லை... நாங்கள் பலியாக்கப்பட்ட மக்களாகவே எங்களை நாங்கள் பிரதிநிதித்துவம் செய்துகொள்கிறோம்.

**இது பாலஸ்தீனியன் பற்றிய சித்திரத்திற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. அவன் பலியாக்கப்பட்டவனா... அல்லது பயங்கரவாதியா?**

0 இவ்வாறு எதிரும் புதிருமாக அவர்களைக் காண்பது அர்த்தமற்றது. நான் யாரையும் கொலை செய்ததில்லை. பலியிடப்பட்டவன் என்றே என்னை நான் கருதுகிறேன். அரேபிய-இஸ்லாமிய போராட்டத்தைப் பற்றிய ஐரோப்பியர்களின் கருத்தை நாம் புரிந்து கொள்வது முக்கியம்: அவர்களைப் பொறுத்தவரை பாலஸ்தீனியன் பலியிடப்பட்டவனாகவும், பயங்கரவாதியாகவும், நீதிபதியாகவும், சாட்சியாகவும் விளங்குகிறான். சமயத்திற்கு தக்கபடி... லெபனானில் நடந்த போரும்இஸ்ரேலியப் படையெடுப்பும் மேற்குநாடுகளின் அனுதாபத்தை எங்களின் மீது திருப்பியது: ஆனால் இந்த அனுதாபம் ஒரு ஏமாற்று வேலைதான. இஸ்ரேலைப் பற்றிய தனது பார்வையை மேற்குநாடுகள் மாற்றிக்கொள்ள மறுக்கின்றன... நிலைமை இவ்வாறு நீடித்து வரும்வரை.. பாலஸ்தீனியன் இத்தகைய குழம்பிய சித்தரிப்புகளில் சிறையுண்டு கிடப்பான்.

**அரபுநாடுகளில் பாலஸ்தீனியன் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றான். எனநீங்கள் கருதுகிறீர்கள்?**

0 இந்தப் பிரச்சினையை எதிர் கொண்டு வாழ்வில் நான் பெற்ற அனுபவத்தை, 'அரேபிய அதிர்ச்சி' என்று வர்ணிக்க விரும்புகிறேன். 1971 வரை நான் இஸ்ரேலில் வாழ்ந்து வந்தேன்: அப்போது இஸ்ரேலியர்கள் இழந்த ஒவ்வொன்றையும் நான் பாராட்டிப் போற்றி வந்தேன். இஸ்ரேலியர்களைப் பொறுத்தவரை பாலஸ்தீனியர்களாகிய நாங்கள இகழ்ச்சிக்குரியவர்களே. இந்த இகழ்ச்சியிலிருந்தல்லவா நம்பிக்கை பிறக்கும். 1971ம் ஆண்டுக்குப் பிறகு நான் பல அரபு நாடுகளுக்குச் சென்றேன். அங்கு நான் கண்ட யதார்த்த நிலைமை, அது எப்படி நான் இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தேனோ அதிலிருந்து மிகவும்மாறுபட்டிருந்தது பல்வேறு அரபு அரசுகளும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. நெருக்கடிகள் ஏதும் ஏற்படாவண்ணம் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே அவை முன்னுரிமை தருகின்றன: இதன் காரணமாக பாலஸ்தீனியனும் அவனது பிரச்சினையும் அவர்களால் புறக்கணிக்கப்பட வேண்டிய விடயங்களாகவே உள்ளன. ஆக்கிரமிப்பு அரசான இஸ்ரேலுடன் எவ்வகையில் தொடர்புகொள்வது என்பதே இந்த அரபு அரசுகளின் அக்கறையாக உள்ளது. இதன் தொடர்ச்சியாகவே பாலஸ்தீனியப் பிரச்சினையை அவை பார்க்கின்றன. இந்த அரபு அரசுகள் நடத்தும் போர் உண்மையில் தமது நாட்டு மக்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் எதிராக நடத்தும் யுத்தம்தான்: இதனை நான் உணர்ந்து கொண்டபோது அதிர்ச்சியடைந்தேன். வெறிச்சோடிக்கிடந்த பெய்ரூட்டில் தன்னந்தனியாக விடப்பட்ட பாலஸ்தீனியர்கள் மீது தாக்குதல் நடந்தபோது 'டெல் அவிவின்' (பெய்ரூட்டின் தலைநகரம்) தெருக்களில் நடந்த போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் தெரிவிக்கப்பட்ட ஆதரவு அரபு அரசுகள் காட்டிய ஆதரவைவிட அதிகமாக இருந்தது. தமக்கென்று ஓர் தனியரசை நிறுவ பாலஸ்தீனியர்களுக்கு உரிமை உண்டு என்பதை பற்றி அரபு அரசுகள் பேசியதைவிடவும் அதிகமாகப் பேசியவர்கள் இஸ்ரேலிய பிரமுகர்கள்தான் என்பதை பாலஸ்தீனியர்கள் அறிந்தனர்.

எங்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமுள்ள வேறுபாடு இதுதான்: அவர்கள் பல யுகங்களாக ஐரோப்பாமீது காட்டிவந்த வெறுப்பிலேயே இன்னமும் ஊறித்திளைத்துக்கொண்டிருக்கிறார்கள. வெளியிலிருந்துவந்து எங்கள் மண்ணைப் பற்றிக்கொண்ட இஸ்ரேலியர்களைக்கூட நாம் மன்னித்துவிடுவோம். எங்கள் இருப்பை அவர்கள் அங்கீகரிப்பார்களேயானால், இந்த அங்கீகாரம் எங்கள் நிலைமையில் ஏற்படும் ஒரு முன்னேற்றமாக இருக்கும்.

**பாலஸ்தீனம் திரும்பிச் செல்வது பற்றி?**

0 ஒரு விடயத்தை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். பாலஸ்தீனம் ஒரு Andalus அல்ல .. எனவே திரும்பிச்செல்லல் சாத்தியமில்லை. கடந்தகாலம் கடந்தகாலம் தான். பாலஸ்தீனத்திற்கு செல்லுதல் பற்றித்தான். இப்போது நாம் பேசவேண்டும். ''திரும்பிச் செல்லுதல்'' தாவியக்கனவுதான்.

'பாலஸ்தீனத்திற்கு திரும்பச் செல்லுதல்' என்பது மேலும் சிறந்ததொரு எதிர்காலத்தைப், புரட்சிகரப் பயணத்தின் விளைவாக மலரும் எதிர்காலத்தை அங்கீகரிப்பதுதான்,

எனது கவிதை அந்த அந்திவேளைப் பாடல்தான் பொழுது புலரும்வரை அது ஒலித்துக்கொண்டே இருக்கும்;

நன்றி காலச்சுவடு



இந்தப் பூச் செடிகளில் எத்தனை வண்ணத்துப்பூச்சிகள் இருக்கின்றன?

## ஆசிரியர் சொன்னார்

பள்ளியில் உணவு இடைவேளை. அனைவரும் சாப்பிட ஆரம்பித்தோம். பேசியபடி சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது நண்பன் ஒருவன் மட்டும் சாப்பாட்டை மூடிக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வீட்டிலிருந்து ஏதோ விசேசமான பலகாரம் கொண்டு வந்து, ஒருவருக்கும் தராது, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் என்று நாங்கள் எண்ணினோம்.

''ஏன்ரா மூடிக்கொண்டு சாப்பிடுறாய்'' என்று ஒருவன் கேட்டான்.

''திறந்து கிடக்கும் பண்டங்களை சாப்பிடக்கூடாது என்று இப்பகானே ஆசிரியர் சொன்னார். அது தான் மூடிக்கொண்டு சாப்பிடுகிறேன்.'' என்று நண்பன் சொன்னான்.

## மூன்று பூக்கள்

பூ பூ பூ பூ பூ பூ
மெல்ல மலரும் பூ என்ன?
விழிப் பூ!

பூ பூ பூ பூ பூ பூ
நாளும் மணக்கும் பூ என்ன?
உழைப் பூ!

பூ பூ பூ பூ பூ பூ
எவரும் என்றும் விரும்பும் பூ?
சுறு சுறுப்பூ!

பூ பூ பூ பூ பூ பூ
மூன்றும் ஒன்றாய்ச் சேரும் பூ?
களிப் பூ!

பூ பூ பூ பூ பூ பூ
நமக்கு வேண்டும் பூ மூன்றே!
விழிப்பு - உழைப்பு - சுறு சுறுப்பு!

# இளையநாதம்

## சிறுவர் கதை



### புதிய மன்னன்

அழகுபுரத்து மன்னனுக்கு பிள்ளைகள் எவருமில்லை. மன்னன், தான் இறந்ததும் அடுத்த மன்னன் யார் என்பதை, பட்டத்து யானை தான் தெரிவு செய்யவேணும். மன்னன் இறந்ததும் அழகு புரத்து மக்கள் அனைவரும் வருவார்கள், பட்டத்துயானை எவர் கழுத்தில் மாலை போடுகிறதோ அவரே அடுத்த மன்னன்!

அரன்மனை சமையற்காரனுக்கு, தான் அடுத்த மன்னனாக வரவேணும் என்ற ஆசை வந்தது. அவன்சகல அரன்மனை ஊழியர்களோடும் கலகலப்பாகப் பழகினான். இதனால் ஊழியர் எல்லோருக்குமே வேண்டப்பட்டவனாகி விட்டான்.

அடுத்து. அரன்மனையின் பட்டத்து யானையை பராமரிக்கும் ஊழியனிடம் வந்தான்: அவனை மேலும் நெருக்கமாக்கிக் கொண்டு சின்னச்சின்ன நல்ல காரியங்கள் மூலம் யானைக்கும் வேண்டியவனாகிவிட்டான்.

பட்டத்து யானையின் பராமரிப்பாளன் இல்லாத நேரத்தில், சமையல் காரனே யானைக்கு உணவளிப்பான்: அதன் காதில் முத்தமிடுவான். துதிக்கையை கட்டித் தழுவுவான். இவைகளை சமையல்காரன் ரகசியமாகவே செய்து வந்தான்

யானையிடம் அவன் வைத்திருந்த நட்பு இறுகிய வேளைதான் மன்னனும் இறந்தான். மன்னன் இறந்த செய்தியை நாட்டு மக்கள் அறிந்ததும் கவலைப்பட்டார்கள். சமையற்காரனும் கவலைப்படுவதுபோல் நடித்தான். பட்டத்து யானையிடம் ஓடிப்போய்,யானையைத் தடவித்தடவிக்கதறினான்.

''மன்னர் இறந்துபோட்டாரே.. அந்த மன்னரைப் போல இனி யார் வரப்போறார்கள்...'' என யானையை தடவிக்கொண்டிருந்தான்.

மறுநாள் மக்கள் எல்லோரும் வந்தார்கள். பட்டத்து யானையிடம் மாலை கொடுக்கப்பட்டது புதியமன்னரை தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் யானை அடியெடுத்துவைத்தது.

யானை போகிற இடமெல்லாம் முண்டியடித்தபடி போகிற சனங்களோடு சமையற்காரனும் போனான். சமையற்காரனைக் கண்டயானை மாலையுடன் அவனுக்கு அருகில் நெருங்கியது. மற்றவர்கள்திகைத்து வாய்கள் பிளந்தபடி யானையை பார்த்துக் கொண்டு நின்றார்கள். சமையற்காரனின் கழுத்தில், யானை மாலையை போட்டுவிட்டது.

அடுத்தகணம் ''புதியமன்னன் வாழ்க'' கோஷம் வானைப்பிளந்தது. பட்டத்து யானையின் பராமரிப்பாளனுக்கு இப்போது தான் சமையற்காரனின் சுயரூபம் புரிந்தது.

''அடப்பாவி! மோசம் செய்து விட்டியே...'' என்று யானையின் பராமரிப்புக்காரன் கத்தினான். அது புதிய மன்னனுக்கு கேட்டுவிட்டது:

''பாராளப்போகும் மன்னன் நான் எனக்கெதிராக ஒரு கூச்சலா...? அவனைப்பிடித்து இழுத்து வாருங்கள்...'' என்று உத்தரவு போட்டான் புதிய மன்னன்.

காவலர்கள் ஓடிவந்து பராமரிப்பாளனைப் பிடித்தார்கள்:

''புதிய மன்னனாக தான் தெரிவான ரகசியம் தெரிந்த ஆள், நான்தான். என்னை புதிய மன்னன் உயிரோடு விடமாட்டான். அதற்குள் நான் முந்திக்கொள்ள வேணும்'' என நினைத்த பராமரிப்பாளன் உடனே காவலர்களின் பிடியிலிருந்து திமிறி ஓடினான்.

யானையை அடக்கும் அங்குசத்தை எடுத்து அதனால் யானையின் கால்களில் ஓங்கிக் குத்தினான். உடனே யானை வலிதாங்க முடியாமல் அலறிக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

யானைமேலிருந்த புதிய மன்னன் நிலை தடுமாறி யானையின் காலடியில் விழுந்து நசுங்கி செத்துப்போனான்:

குறுக்கு வழியில் பட்டத்துக்கு வந்த சமையற்காரன் பதவிக்கு வந்த பிறகாவது பெருந்தன்மையுடன் நடந்து கொண்டிருப்பானேயாகில் பதவியோடு உயிரையும் பறிகொடுக்கும் நிலை வந்திருக்காது.

- பிரஷகி

## புதிர் - 7

(விளையாட்டுக்கணக்கு)

1) ஒரு குடியானவர் தன் மகனிடம் ஏழு பூச்செடிகளைக் கொடுத்து, வரிசைக்கு மூன்று செடிகள் வருமாறு, ஆறு வரிசைகளில் நடச்சொன்னார் எப்படி?

(பூச்செடியின் அடையாளம் ★ என்க)

2) ஓர் எண்ணை முதலில் அதே எண்ணால் பெருக்கி வரும் தொகையை அதே எண்ணுடன் கூட்டி, பிறகு அதே எண்ணைக் கழித்து, அதே எண்ணுடன் வகுத்தால் அதே எண் வரும். அந்த எண் எது?

## புதிர் -05இல் சரியானவிடைகள் எழுதியோர்

| | |
|---|---|
| கு: இசைவேங்கை | இ. சுசீதரன் |
| ந: அருணன் | அலைஇசை |
| அ. ரமணன் | சமர்வாணம் |
| வ: மருதா | குழலி |
| சி: சுகந்திரலிங்கம் | ஜானகி |

பரிசுக்குரியவர்:- பா: ரமணன்
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.



## சுதனும் ரதனும்

சுதன்:
ஈக்கள் அமரும்போது பின்னங்கால்களை வேகமாகத் தேய்த்துக்கொள்வதேன்? என்று உனக்குத்தெரியுமா?

ரதன்:
ஈக்கள் அமர்ந்துகொண்டிருக்கும்போது பின்னங்கால்களை அல்ல, முன்னங்கால்களையே வேகமாகத் தேய்த்துக்கொள்ளும். காரணம் ஈக்களின் வாய் உறுப்புக்களின் அமைப்புத் தன்மை திரவநிலை அல்லது கூழ்ம நிலை. உணவுப்பொருட்களை மட்டுமே எடுத்துக் கொள்ளும்படி தகவமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆகையால் சோற்றுப் பருக்கையின் மீது ஈ உட்கார்ந்து, தன் முன்னிரு கால்களிலுள்ள நுண் உரோம நீட்சி உதவியால் உமிழ்நீரை எடுத்து பருக்கையின் மீது தடவி... கரைத்து கூழ்ம நிலைக்கு மாற்றும். அதன்பிறகுதான வாய் உறுப்புக்கள் மூலம் எடுத்துக்கொள்ளும். இந்தச் செயலுக்குத்தான் முன்னிரு கால்களை அடிக்கடி தேய்த்துக்கொள்கிறது. ஈ மொய்த்த பண்டங்களைச் சாப்பிடக் கூடாது என்பதன் பின்னணி இப்போது உனக்கும் புரிந்திருக்கும்.




# உணர்ச்சிகளும் உடல் நலமும்...

உணர்ச்சி வயப்பட்டவர்கள் தான் நாம். நம்மில் யாருமே மனக் கிளர்ச்சி அற்றவர்கள் அல்ல.

''சொரி, என்னை அறியாமலே நடந்துவிட்டது. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்'' இப்படிப் புலம்புகிறவர்களை நாம் பார்க்கிறோம். யாருமே உணர்ச்சிகளின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கில்லை: அவை நம் வாழ்வை ஆட்டுவிக்கிறது: எல்லாவற்றிற்கும் மேலாக ஆரோக்கியத்தின் மீது அவை ஏற்படுத்தும் விளைவுகள் சக்திவாய்ந்தவை.

உணர்ச்சிகளை, இணக்கமானது. எதிர்மறையானதுஎனஇருவகையாகப் பிரிக்கலாம். எதிர்மறையானவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், இணக்கமானவற்றை வலுப்படுத்திக் கொள்ளவும் கற்றுக்கொண்டால் போதும்.

முதலில் எதிர்மறை உணர்வுகள் என்கிற நெகறிவ் சமாச்சாரங்களைப் பார்ப்போம்.

### 1. கோபம்

கோபம் எதனால் விளைந்ததாயினும் அதுநமதுதேகமன ஆரோக்கியத்தைப் பாதிக்கவே செய்யும். கோபத்தை அடக்க முற்படும்போது தான் பிரச்சினைகள் முளைக்கின்றன. உச்ச இரத்த அழுத்தம், மாரடைப்பு வலிப்பு என்று டொக்டரிடம்போய் நின்றால் அவர், 'கோபத்தை விடுங்கள்' என்றுதான் சொல்வார். கோபப்படுகிறவர்களுக்குத்தான் 'அல்சர்' வருகிறது.

லண்டனில்கடந்த ஒரு ஆய்வின்மூலம் கோபத்தை மறைக்க முயலும் பெண்களுக்கு மார்பக புற்றுநோய்வரும் என்பதுதெரிய வந்தது.

சரி, கோபத்தினால் விளையும்கேடுகளை தவிர்ப்பது எப்படி?

முதலில் நியாயமான கோபமா என்றுஎண்ணிப் பாருங்கள். அப்படிப் பட்டதாயின் சில வார்த்தையில் வெளிப்படுத்திவிடுங்கள். நேர்மையற்றது என்று பட்டால் பேசாமல் ஒரு நடை போய்வாருங்கள்:

கோபம் மிதமிஞ்சி வருகிறபோது ஏதாவது ஒரு வேலையைஏற்படுத்திக் கொள்ளுங்கள். தோட்டத்துச் செடிகளுக்கு நீர் பாய்ச்சுகின்ற மாதிரி.

### 2. குற்ற உணர்வு

இது ஒரு மோசமான உணர்ச்சி வசப்பட்ட நிலையாகும்: இதனை மனச்சாட்சியிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது கடினம்.

நாம் தப்பு செய்கிறபோது, ஒன்றைச் செய்யத் தவறிவிடுகிறபோது குற்ற மனப்பான்மைக்கு உள்ளாகிறோம்: நம்மை நாமே குற்றம் சாட்டிக் கொண்டு அவதிப்படுகிறோம்.

குற்ற மனப்பான்மை இரண்டு வகைகளில் விளைகிறது.

ஒன்று உறவில் தோன்றுவது: 'உனக்கு கொஞ்சமாவது பாசம் இருந்தா இப்படி நடக்கமாட்டே' என்று தாய் குறைபடும்போதுமகனின் மனதில் ஏற்படும் உணர்வு. குற்ற மனப்பான்மையில் மன இறுக்கம் உண்டாகும். இதுபல நோய்களுக்கும் வித்திடுகிறது.

மற்றொன்று, சுற்றி இருப்பவர்களின் போதனை அல்லது உபதேசம் தொடர்பானது: நெறிதவறிவிட்டோமா என்ற நினைப்பு,

குற்ற உணர்விலிருந்து விடுபட தன்னம்பிக்கைதான் அவசியம் நம்முடைய சுபாவங்கள், சுயமதிப்பீடுகள், பலங்கள் பற்றிய சிந்தனைஎவத்திருக்க வேண்டும்

### 3. அச்சம்

பணம், யுத்தம். சுற்றுப்புறம் என்று பயமுறுத்த அநேக சமாச்சாரங்கள பெருகிவரும் வன்முறைகள், நகரத்தின் சுகாதாரக் கேடு போல் சொல்லிக்கொண்டே போகலாம்: ஆரோக்கியம் பற்றிய பயம் எல்லோருக்குமே கவலை கொடுக்கிறது.

பயத்தை வெல்ல வழியே இல்லையா? ஏன் இல்லை. இதோ-

எது உங்களை அஞ்சவைக்கிறதோ. அதை இனம் காணுங்கள். எதிர்த்து நில்லுங்கள்:

உடல் நிலை பற்றிய பயமானால் டொக்டரிடம் தான்போகவேண்டும்.

சிலர் நடக்காமலே போகக் கூடிய விசயங்கள் பற்றி கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்கள். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் அனாவசிய பயங்கள் 'அட்ரஸ்' இல்லாமல் போய்விடும்.

### சலிப்பு:

சோம்பி இருத்தலும், சலிப்புறுதலும் வாழ்க்கையையே சீரழித்துவிடும்.

இல்லத்தரசிகளுக்கு வீடு, குழந்தைகள் என்று ஒரு வட்டத்துக்குள்ளேயே இயங்குகின்றநிலை. ''குழந்தையோடசொக்ஸைகாணோமே'' ''அவரோட சட்டைக்கு தெறிதைக்கணுமே'' என்று அல்லாடிக்கொண்டிருப்பவருக்கு நாள்முழுக்க பாடுபட்டும் அதற்கான பாராட்டு கிடைக்காத நிலையில் சலிப்பு வரத்தான் செய்யும்,

ஆடை உற்பத்தி நிறுவனத்தில் துணிகளை தைக்கிற பெண்ணாயினும், அலுவலகத்தில் கிளார்க்காக பணிபுரியும்ஆணாயினும்திரும்ப திரும்ப ஒரேகாரியத்தை செய்கிறதென்றால் போரடிக்கத்தானே செய்யும்.

நூறு நேர்முகப்பரீட்சைக்குப் போய் வந்ததும் வேலை கிடைக்காத பட்டதாரிக்கு சலிப்புதான் வரும்:

ஓய்வு பெற்ற பிறகு செய்வதற்கு எந்தக்காரியமும் இல்லாமல் நியூஸ் பேப்பரும் சாய்வு நாற்காலியுமாய் முடங்கி விட்டவர்களுக்கு வாழ்க்கை உப்புச்சப்பற்றதாகிவிடும்.

சலிப்பு என்பது அபாயகரமான விசயம். இருதய நோய், சரும உபாதை மலச்சிக்கல் சோர்வுறுதல் என்று பல தொந்தரவுகளுக்கு அது காரணமாகும்.

சரி. சரி பிரச்சினையை எவ்வாறு கையாளுவது.

பயனுள்ள பொழுது போக்கு ஏதாவதொன்றில் ஈடுபடலாம். அது மனதுக்குப் பிடித்தமானதாய் இருக்க வேண்டும்.

கொஞ்சம் கற்பனையை உபயோகித்து பகற்கனவில் மூழ்குவதும் நல்லது.

### சோகம்:-

குழந்தையாகட்டும், பெரியவராகட்டும் அடுத்தவரின் பராமரிப்புஇல்லாத நிலையில் வருத்தத்திற்கு உள்ளாவார்கள். அவர்கள் தங்கள் ஏக்கங்களை, வருத்தங்களை அழுகையில் தான் வெளிப்படுத்துவார்கள்: உடம்பில் அடிபட்டால் வரும்அழுகை சாதாரணமானது:

ஆனால் உணர்ச்சிவசப்பட்டு விடுகிற கண்ணீரில் 'புரதம்' அதிகஅளவு இருக்கும்.

அழுவதில் ஒரு சௌகரியம்உடம்பில் உள்ள அநாவசிய கழிவுப் பொருள்கள் கண்ணீர் வழியேவெளியேறிவிடும்.

சோகத்தை அழுது தீர்த்துவிடுங்கள் மூடிமறைக்கிறவர்களுக்குத்தான் உற்சாகமின்மை வந்துவிடுகிறது.

அழுவது பலவீனம் என்பது பலரின் நினைப்பு. அழாதபட்சத்தில் விளைவது அனேக கெடுதல்கள் ''அழுதால் கொஞ்சம் நிம்மதி'' என்று கவிஞர் பாடினார். ரொம்ப சரி அழுகை அனேகசுமைகளைஇறக்கிவிடுகிறது. சோகத்திலிருந்து நம்மை இளைப்பாற்றுகிறது.

இணக்கமான உணர்ச்சிகளை விரும்பத்தக்க உணர்வுகள் எனலாம்:

(தொடரும்)




# உயிர்ப் பல்வகைமைக்கல்வியின் முக்கியத்துவம்

உயிர்ப் பல்வகைமை பற்றிய உணர்வும், அறிவும் இன்றுபெரிதும் வேண்டப்படுகின்றது: ஒரு நாட்டின் வாழ்வும் வளமும் உயிர்ப்பல்வகைமையைப் பேணுதலிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இதனால் தான் ஒரு நாட்டின் கனிவளம், கலாச்சார செல்வம் என்பவற்றிலும் பார்க்க உயிரின வளம் பெறுமதி மிக்கது எனப்படுகின்றது.

பூமியில் ஏறத்தாழ 350 கோடிவருடங்களுக்கு மேலாக உயிரினங்கள் வாழ்கின்றன: இந்தக் கால எல்லை மிகவும் நீண்டது என்பதை மனதில் கொள்வது அவசியம். புவியின் அங்கிகளின் வருகையானது புவியின் தன்மையைப் பெருமளவிற்கு மாற்றி அமைத்துள்ளது. எடுத்துக்காட்டாக தாவரங்களினால் ஒளித்தொகுப்பின் போது வெளிவிடப்படும் ஒட்சிசன் வளிமண்டலத்துடன் சேர்க்கப்படுகின்றது. இந்த ஒட்சிசன் சேர்க்கையானது, புவியின் மேலான ஓசோன் படையின் தாக்கத்தைக் குறைத்துள்ளது: இதனால்தான் உயிரினங்கள் புவியில் வாழ முடிகின்றது. சூழற்தொகுதி அலகில் உயிரினங்களுக்கும் உயிரற்றவற்றிற்கும் மிகவும் நெருங்கிய சக்திமிக்க தொடர்பு உண்டென்றும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இன்னும் விரிவாகச்சொல்வதாயிருந்தால், இவ்விரு கூறுகளில் ஒன்றில்லையேல் மற்றையதும் இல்லையென்றாகும். இவ்வாறு நிகழுமிடத்து, காலப்போக்கில்புவியானது சூனியமானதாகிவிடும் என்று கருதப்படுகின்றது.

உயிர்ப் பல்வகைமை என்பது ஒரு கல உயிரினத்திலிருந்து பல மில்லியன் கணக்கான உயிரினங்கள் தோன்றியதைச் சுட்டி நிற்கின்றது; இதில் மனித இனமும் ஒன்றாகும். மனித இனமானது (Homo Sapiens) இற்றைக்கு ஏறத்தாழ 50,000 வருடங்களுக்குமுன்புதான் தோற்றம்பெற்றது. எனினும் இன்றைய அறிவியலாளரின் கூற்றுப்படி, அடுத்த ஆயிரம் வருடங்களில் இப்புவியிலிருந்து மனித இனம் மறைந்து போகும் எனக் கருதப்படுகின்றது. ஆனால் மனித இன மறைவின் பின்னும், புவித்தொகுதியானது பாதிப்புக்குள்ளாகாதுதொடரும்என்று கருதப்படுகின்றது.

புவியில் உயிரினங்கள் தொடர்ந்தும் வாழ்வதற்கு, இயற்கைச் சமனிலை பேணப்படுவது அவசியமாகும்: இன்றியமையாத இச்சமநிலைச் சூழலில் உயிர்ப்பல்வகைமையானது ஒரு முக்கிய கூறாகும். இந்த இயற்கையான சூழல் சமநிலையானது புவிக்குப் பிந்திவந்த மனிதனால் பாதிப்புக்குள்ளாகின்றது. நாகரீகத்தின் பெயரால் அழகிய சூழலின் சமநிலையைக் குலைககும் மனித நடவடிக்கைகளினால் பல விளைவுகளை புவியானதுஎதிர்கொள்கின்றது. இவற்றில் சில,

1) புவிக்கோளம் வெப்பமடைதல்.
2) ஓசோன் படையின் அளவு குறைதல்.
3) நிலச்சீரழிவு.
4) தரை, நீர், வளி மாசடைதல்.
5) குடித்தொகைப் பெருக்கம்.
6) இயற்கை வளங்களின் மிதமிஞ்சிய பாவனை.
7) கழிவுகள் சேருதல்.

இவை யாவுமே மனிதனின் வருகையின் பின் ஏற்பட்ட பிரச்சினைகளாகும்.

வீ. தனுஜியா

வெள்ளி நாதத்திற்கு படைப்பாளிகளிடமிருந்து

சிறுகதைகள்

கவிதைகள்

ஓவியங்கள்

கட்டுரைகள்

வரவேற்கப்படுகின்றது:

வெள்ளி நாதம் பற்றிய உங்கள்ஆக்கபூர்வமான ஆலோசனைகள் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது,

தொடர்பு கட்கு

ஈழநாதம் - வெள்ளிநாதம்
யாழ்சாலை
கிளிநொச்சி

பரந்தன் சாலை
புதுக்குடியிருப்பு

## நேர்காணல்

மலேசியா - மலேசியர்கள், சீனர்கள், தமிழர்கள் என்ற மூவின மக்களைக் கொண்டதொரு நாடு. அங்கு சுமார் இருபது இலட்சம் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் இந்தியாவிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் குடியேறிய தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசியத்தலைவரின் இயல்புகளைக் கண்டு வியந்துபோனேன்

## மலேசிய பத்திரிகையாளர் வி. சுகுமார் கூறுகிறார்

இவ்வாறு மலேசியாவில் வாழ்ந்து வரும் மக்களிடையே பல்வேறு தமிழ் பத்திரிகைளும் வெளிவருகின்றன. அவ்வாறு மலேசியாவில் வெளிவருகின்ற ''மலேசிய நண்பன்'' பத்திரிகையின் செய்தி ஆசிரியராக] கடமையாற்றும் வி. சுகுமார் அவர்கள் வன்னிக்கு வருகைதந்திருந்தார்.



வி. சுகுமார் அவர்கள் அண்மையில் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் வன்னியில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் அவர்களை சந்தித்து உரையாடிய அன்றைய தினம், வி. சுகுமார் அவர்களுக்கும் நேரடியாக தலைவர் பிரபாகரன் அவர்களைப்பார்க்கும் வாய்ப்புக்கிட்டியது.

தலைவர் பிரபாகரன் அவர்களை சந்தித்த அதேவேளை அவருடைய தனித்துவமான இயல்புகளைக்கண்டு வியந்து போனதோடு, அவரால் இந்த குற்றமற்ற ஒரு நல்ல சமுதாயத்தை எப்படி உருவாக்க முடிந்தது எனவும் வியப்போடு எம்மிடம் கேள்வி எழுப்பினார்.

''மலேசிய நண்பன்'' பத்திரிகையின் செய்தியாசிரியர் வி. சுகுமார் அவர்கள் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை எமது மக்களோடு பகிர்ந்து கொள்வதில் நாமும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மலேசியாவில் பெருமளவு தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் யாழ்ப்பாணத்திலிருந்து குடியேறியவர்களும் யாழ்ப்பாணத்தவர்களும் நிறையவே இருக்கிறார்கள். இவர்கள் ஈழத்தமிழ் மக்களின் போராட்டம், அவர்களுடைய கலை கலாச்சாரம் போன்ற விடயங்களில் அக்கறையோடு இருக்கிறார்கள், அத்தோடு தலைவர் பிரபாகரன் அவர்களைப் பற்றி அறிந்துகொள்வதிலும், அவர் பற்றிய செய்திகளை வாசிப்பதிலும், ஆர்வம் காட்டிவருகின்றார்கள்.

மலேசியாவில் வாழ்ந்து வருகின்ற மக்கள் தலைவர் பிரபாகரன் அவர்களை ஒரு அரசியல் வாதியாக பார்க்கவில்லை; ஒரு போராட்டவாதியாகவே பார்க்கின்றார்கள்.

அரசியல்வாதிகளைப் பார்த்து அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டு சொல்லாடல்களையும் சொல்விளையாடல்களையும் பயன்படுத்தி அவர்கள் செய்த பல காரியங்கள் உலகத்தில் வாழும் தமிழர்களுக்கு நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தியது. இந்நிலையில் அவர்கள் உலகத்தமிழர்களுக்கு ஒரு சரியான தலைமை இல்லை என்பதை புரிந்து கொண்டார்கள்.

வெறும் வார்த்தையாலங்களால் எதுவும் இல்லையென்றும் தமிழர்களிற்கு எழுச்சிபூர்வமான விடிவு வரப்போவதில்லை என்பதையும் புரிந்து கொண்டபோது தான் தலைவர் பிரபாகரனின் எழுச்சியும், அவரது இயக்க கட்டமைப்பும், கட்டுக் கோப்பான அரசியல் நடவடிக்கையும் மக்களை கவர்ந்தது.

மலேசிய மக்களிற்கு தலைவர் பிரபாகரனில் மிகவும் கவர்ந்த விடயமாக அவர் குறிப்பிடும் போது'

தலைவர் பிரபாகரன் ஒரு அரசியல் வ'தியாக, கட்டுக்கு வெளியில் சென்று செயற்படாமல்- அரசியல், சமூகம், கலை கலாச்சாரம்; அதேசமயம் போராட்டம் என்று ஒரு ஒட்டு மொத்தமான போராட்டத்தை நெறிப்படுத்தியமைதான் மலேசிய மக்களை மிகவும் கவர்ந்தது என்கிறார்.

தலைவர் பிரபாகரன் அவர்களை நான் படங்களில் தொலைக் காட்சிகளில் பார்த்தபோதெல்லாம் மிகவும் கடினமான ஒரு இறுக்கமான மனிதராகத்தான் இருப்பார் என நினைத்தேன். ஏனென்றால் அவருடைய போராட்டங்கள் அப்படியானவை, அத்தோடு ஒரு இறுக்கமான மனிதராகத்தான் இருக்க வேண்டும் என்றும் எனக்குள்ளே நான் நினைத்துக் கொண்டேன். ஆனால் இங்கு வந்து பார்த்த போதுதான் அவர் நம்முள்ளே ஒருவராக இருக்கிறார். போராட்டம் என்பது வேறு மனிதர்களாக இருப்பது வேறு என்பதை தலைவரிலிருந்து கண்டுகொண்டேன்.

உண்மையில் அவரும் நம்மைப் போலவே இருக்கிறார். அவர் என்னைப் பார்த்தவுடன் நிறையவே மகிழ்ச்சியுடன் நகைச்சுவையாக பேசினார். நாங்களும் நகைச்சுவையாக பேசிய போது ஏற்றுக் கொண்டார் என்றார்;

அன்று நடந்த சிறுநிகழ்வு ''மலேசிய நண்பன்'' பத்திரிகையாசிரியரை மட்டுமல்ல எம்மைக் கூட வியப்பிலாழ்த்திய அந்த சம்பவம் இதுதான்

ஒரு படம் எடுப்பதற்காக நின்றபோது அந்த இடத்திலிருந்து படம் எடுத்தால் அந்த கோணத்தில் அந்தப்படம் அழகாகாது என்பதை யாருமே உணரவில்லை. அதாவது படப்பிடிப்பாளர்கள் கூட உணரவில்லை.

ஆனால் தலைவர் பிரபாகரன் தான் கூறினார் இந்த இடத்திலிருந்து படம் எடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள் எத்தனைபடம் எடுத்து விட்டீர்கள், இந்த கோணம் சரியா? பின்புலம் சரியா இல்லை எனக் கூறி படப்பிடிப்பாளர்களை அழைத்துக் கொண்டு போய் ஒரு நேர்த்தியான இடத்தில் எடுத்தார்.

அப்போது கூட எல்லோரும்வேகமாக படம் எடுத்தார்கள் அப்போதும் கூறினார் நீங்கள் எல்லோரும் இப்போதுகூடஒருதவறு செய்கின்றீர்கள். இந்த பூச்சாடி பின்னுக்கல்லவா இருக்கின்றது. பின்னால் இருந்தால் இந்த பூச்சாடியின் அழகு போய்விடுமல்லவா? என்று கூறி அவரே பூச்சாடியை தூக்கி முன்புறம் வைத்தார்.

அந்த சம்பவம் தொடர்பாக அவர் தெரிவிக்கும் போது அந்த அளவிற்கு தலைவருக்குள் அழகியல் உணர்வு இருக்கிறது. உலக நாடுகள் எல்லாம் அவரை ஒரு மூர்க்கமான போராட்ட வாதியாகத்தான் வர்ணித்தார்கள். ஆனால் நான் கூறுகின்றேன் ''அவருக்குள் அழகியல் உணர்வு இருக்கிறது. பூச்சாடிகூட முன்னால் இருந்தால் தான் அதற்கொரு அழகு இருக்கிறது என்றுஅவர் அந்த நேரத்தில் கூட சிந்தித்தார்.

தலைவர்சின்ன விடயங்களில்கூட கவனமாக கவனிக்கின்ற மனிதராகத்தான் இருக்கிறார் என்றார்.

சிறி இந்திரகுமார்

தலைவர் அவர்களிடம் மலேசிய மக்களிற்காக ஒரு செய்தி வேண்டும் என்று கேட்டேன்; அப்போது அவர் எமது அரசியல் பின்புலம் பற்றியெல்லாம் சிந்தித்தார். சிந்தித்துவிட்டு. ''உலகத்தில் தமிழர்கள் எங்கிருந்தாலும் கல்வி பொருளாதாரம் இவற்றில் அதிகமாக கவனம் செலுத்துங்கள் அதில் தனிக்கவனம் செலுத்துங்கள். கல்வி, பொருளாதாரம் வளர்கின்ற போது தமிழினம் மேலோங்கும்,என்று'' கூறினார்.

தலைவ்வர் அவர்கள் உலகளாவிய நிலையில் தமிழர்களுடைய எதிர்காலம் பற்றி சிந்திக்கின்றார். உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களின் உயர்ச்சிக்கு கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்வு ஏற்படவேண்டும் என நினைக்கின்றார்.

எங்களுடைய நாடுகளில் கூட கல்வி பொருளாதாரத்தில்முன்னேறினால் தான் பிற இனத்தவர்களை மிஞ்சி நாம் முன்னுக்கு வரலாம் என்பதை நாங்கள் உணருகின்றோம். அதை தலைவர் அவர்கள் இங்கு இருந்து கொண்டும் கூறும் போது; எங்களுடையசமுதாயத்திற்கு எது தேவை என்பதை அவர் உணர்ந்துள்ளதை காட்டுகின்றது.

உலகத்தமிழர்களுக்கு அவர் ஓர் நல்ல வழிகாட்டி; நல்லதொரு முன்னோடி; நல்ல கட்டுக்கோப்பான தலைவர் என்பதில் எந்த விதமான மாற்றுக்கருத்துக்களிற்கு இடமே இல்லை. அவர் இந்த தலைமுறையினுடைய நல்ல தொரு தலைவர் என்றார்திரு; வி சுகுமார் அவர்கள்.

வன்னிமக்களையும் இந்த மண்ணில் நேர்த்தியாக வழி நடத்தப்படும் சட்டம். ஒழுங்கையும் பற்றி அவர்கருத்து தெரிவிக்கும் போது.

உலகமெங்கும் பரந்துவாழுகின்ற தமிழர்களுடையநோக்கங்கள், இலக்குகள் வேறாக இருக்கலாம்; ஆனால், வன்னியிலிருந்து போராடுகின்ற மக்கள் இந்த மண்ணிற்கே உரிய முறையில் போராடுகின்றார்கள் இந்த தாயகத்தை அவர்கள்நேசித்ததன் முழுமையான அற்பணிப்பு.

நான் இந்த மண்ணைப்பார்த்த போது சின்ன சின்ன குற்றங்கள் எல்லாம் இல்லை இதைப்பார்த்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

நான் காவல்துறை பணிமனையெல்லாம் சென்று பார்த்தேன். அவர்களுடைய குற்றச் செயல்களை பதிவு செய்வதற்கான பதிவேடுகளையும் நான் பார்த்தேன். இந்த மண்ணில் மிகமிக குற்றச் செயல்கள் இல்லாத தனிச் சமூகத்தை தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்

குற்றமற்ற சமூகம் ஒன்றை உருவாக்குவதென்பது எனக்கொரு கனவாகத்தான் இருந்தது. ஆனால் அது ஈழத்தில் நடக்கிறது; அதற்கு தலைவர் அவர்கள் தானே காரணமாக இருக்கின்றார்.

> தலைவர் பிரபாகரன் ஒரு அரசியல் வாதியாக, கட்டுக்கு வெளியில் சென்று செயற்படாமல் - அரசியல், சமூகம், கலை கலாச்சாரம்; அதேசமயம் போராட்டம் என்று ஒரு ஒட்டுமொத்தமான போராட்டத்தை நெறிப்படுத்தியமைதான் மலேசிய மக்களை மிகவும் கவர்ந்தது.

இந்த மாதிரியான ஒரு இளைஞர் சமுதாயம் வெளிநாடுகளிலுள்ள தமிழர்களிடையே உருவாகுமானால், உலகில் மிகச்சிறந்த சமுதாயமாக தமிழ்சமுதாயமே உருவாகவே முடியும், அங்குதமிழ் சமுதாயமே ஏனைய இனங்களுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும்;

நான் வன்னியைப்பார்த்த போது புரிந்து கொண்டேன். வன்னிக்குள் ஒரு சோகம் இருக்கிறது: அவர்களிற்குள் அது இயல்பாக இருக்கிறது ஏனென்றால் அவர்கள் இழந்தது அதிகம். அவர்கள் பெற்ற வெற்றிகளிற்குள் மூழ்கிவிடவில்லை. அந்த வெற்றியிலும் இழந்ததை மீள நினைக்கின்றார்கள் இதை ஒரு ''மன நிலையை சமநிலைப்படுத்துவது'' என்று சொல்லலாம்.

நான் வன்னியிலிருக்கும் போது மாவீரர் துயிலும் இல்லங்களைப் போய் பார்த்தேன். அறு வருடப் பிறப்பு நிறைய பெற்றோர்கள்வந்து தங்களுடைய பிள்ளைகளுக்கு பூ வைத்தார்கள். ஒவ்வொருபெற்றோரிடையேயும் சோகம் இருந்தது. மிகச் சிறந்த செல்வங்களை அவர்கள இழந்திருக்கிறார்கள் ஆனால் அவர்களிடையே இழப்பின் மூலம் தான் தங்களுடைய சுதந்திரத்தைப் பெற்றுவிடுகின்ற நிறைவு இருந்தது.

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக மலேசிய மக்களின் நிலை பற்றி தெரிவிக்கும்போது.

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினையில் மலேசிய மக்கள் மிகவும் அனுதாபமுடையவர்கள்; அவர்கள் இனத்தாலும், மொழியாலும் கலாச்சாரத்தாலும், சமயத்தாலும் ஒன்றுபட்டவர்கள். அவர்களுடைய முழுக்கவனமும் ஈழத்தில் தான் இருக்கிறது.


ஆரம்பகாலத்தில் மலேசியத்தமிழர்கள் அனுதாபிகளாகத்தான் இருந்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# நிலாந்தனின் ஓவியங்கள்

## சில மனப்பதிவுகள்...

மனங்கள் ஒரு விதமான எழுச்சியுடன் தம் எதிர்கால வாழ்வு பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், புதுக்குடியிருப்பு நகரின் மையத்தில் மு/புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் முல்லை நுண்கலைக் கல்லூரிகளின் ஏற்பாட்டில் ஓவியர் நிலாந்தனின் ''பிள்ளையார் போர் உருவ ஓவியக் காட்சி'' கடந்த 6ம், 7ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் இடம் பெறுவதாகத் தகவல் அறிந்தோம்.



வன்னி மண்ணில் தனி ஒருவரின் ஓவியக் காட்சி என்பது எமது நினைவுக்கு எட்டிய வரை இதுநீண்ட காலத்தின்பின்னானதாகும். அதை விட ஓவியக்காட்சி என்றவுடன் அதுவும் போர் உருவங்கள் என்ற செய்தி எம்மை உற்சாகமடைய வைத்தது;

இறுக்கமான சிறைக்குள் இருந்தவாறு நீண்ட தொரு பெரும் போரை நிகழ்த்திய மக்களின் வாழ்வு இக்காட்சியில்த் தெரியும் என்பதும் முடிந்து விடப்போகின்ற அல்லது தற்போது ஓய்ந்திருக்கும் ஈழவிடுதலைப் போரின் அழிவுகள், அதனூடான வளர்ச்சிகள், வெற்றிகள் காட்சிப்படுத்தப் பட்டிருக்கும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடம் அழகினை ரசிப்பதையே உயரிய கலையாகக் கொண்ட நானும் நண்பனும் ஆவலோடு புறப்பட்டோம்.

ஆரவாரமின்றி அமைதியாக இருந்த பாடசாலை மண்டபத்துள் நுழைந்தோம். நுழையும் போது வாசலின் குறுக்காகக் கட்டப்பட்டிருந்த விளம்பரப் பதாகையைத் தவிர நாம் வேறு எதையுமே பார்க்குமளவு மனநிலையோடு இருக்கவில்லை. ஏனெனில் ஓவியக்காட்சியைப் பார்க்கும் ஆர்வம் உந்தித்தள்ளியது. மெல்லிய இசை நாதம் மண்டபத்தில் அமைதியை நிலைநிறுத்த அழகாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்த மண்டபத்துள் புகுந்தோம். கோட்டுச் சித்திரமாகவும் பஸ்ரல் வர்ணச் சித்திரமாகவும் இருந்த அழகான சித்திரங்கள் எமது எதிர்பார்ப்பைத் தகர்த்தன ஆனாலும் எம்மிடம் ஏதோ ஒரு ஆர்வம் எழ ஒவ்வொரு சித்திரத்தையும் ஆறுதலாகப் பார்த்தோம். தும்பிக்கை, தொந்தி என்று சொல்லக் கூடிய அமைப்புக்கள் திரிபுபடுத்தப்பட்டு மனித வடிவுக்கேற்ப கைகால்களும் அசைவுபடுத்தப்பட்டு முழுமைப்படுத்தப்பட்ட உருவங்கள் சித்திரமாக்கப்பட்டிருந்தன. இது பிள்ளையார் என்று இனங்காண்பது கடினமாக இருந்தாலும் எம்முயற்சி பலனைத் தந்தது அது படைப்பாளனுக்கும் வெற்றியே. ஒவ்வொரு படைப்பும் மிகக் கடுமையான உழைப்பின் பரிசு என்பது படைப்புக்களுடாகக் காண முடிந்தது. கோட்டுச் சித்திரங்களில் பயன்படுத்தப்பட்ட வேகமான கோடுகள் நெருக்கமான பின்னல்க் கோடுகள் புள்ளிகள், வர்ணச் சித்திரத்தில் பஸ்ரல் சோக்வர்ணம் என நினைக்கிறேன். அதனைச் சாதாரணமாகப் பூசி மெழுகி விடாது அதற்குள்ளும் அழுத்தி வேறுவேறு விதமான கோடுகளிட்டுப் புள்ளியிட்டு சித்திரத்தை மேம்படுத்தி இருப்பது பாராட்டத்தக்கது.

போர் உருவங்கள் என்ற விளம்பரம் இங்கு பொய்யாக்கப்பட்டதாகத் தோன்றியது. பல்வேறு கோணங்களில் பல்வேறு விதமாகப் பிள்ளையாரை வரைந்து கொண்ட நிலாந்தன் எப்படிப் போரை இதனுடன் இணைத்துள்ளார் என்ற கேள்வி எழ அவரையே நாடினோம்.

''போர் என்னுள் பிள்ளையாராகப் பிரதிபலித்தது'' என்கிறார். அவர் அது எப்படியோ ஆனாலும் எம்மைப் பொறுத்த வரை பிள்ளையார், தெய்வம், வழிபாட்டுக்குரியவர், அங்கம் சிதைந்த அல்லது திரிபுபட்ட திருவுருவம் பார்ப்பதற்கே ஆகாது என்பது ஓர் நம்பிக்கை. ஆனாலும் ஓவியர் சொல்கிறார்: ''எமது பிளளையார் எமக்குரியவர். அவரை யாராலும் சிதைக்க முடியாது. பிள்ளையாரின் தொந்தியும் தும்பிக்கையும் இருக்கும் வரை அவர் பிள்ளையார் தான். சால்வை, வேட்டி, எலி, ஆயுதங்கள், ஆபரணங்கள் எதை எடுத்தாலும் அவரை எப்படி எப்படியெல்லாம் நகர்த்தி அபிநயத் தோற்றங்களில் வைத்தாலும் பிள்ளையார் தான். மற்றத் தெய்வங்களுக்கு அப்படியொரு தன்மை இல்லை. முருகனிடம் வேலைப் பறித்து விட்டால் அவர் மனிதனாகி விடுவார். கண்ணனிடம் குழலைப் பறித்து விட்டால் சிறுவனாகிவிடுவார். ஆனாலும் பிள்ளையாரின் உடல் அமைப்பு அப்படியில்லை. அதனால்த்தான் நான் பிள்ளையாரினை இப்படிப் படைத்தேன்'' என்றார்.

இந்துத் தெய்வமாக வணங்கப்படும் பிள்ளையார் இருவுருவம் நிலாந்தனின் ஓவியங்களில் திரிவு படுத்தப்பட்டதனை சிலரால் ரசிக்கவோ அல்லது ஏற்கவோ முடியாது இருந்திருக்கலாம்; ஆனால் சமயம் என்ற வட்டத்துள் நின்று பார்க்கும்போது கூட பிள்ளையாரை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற நம்பிக்கை உண்டு. அதாவது ஒரு யானைத்தலையையும் மனித உடலும் இருந்தால் அது பிள்ளையார்தான். அதையாராலும் மறுக்க முடியாது.

இங்கே ஆதியில் எம் வழிபாட்டில் உள்ள ஒட்டல் வயிறும் மெலிந்த கூடலும் உடைய பிள்ளையார் வடிவிலும் சிறப்புப் பெயரோடு அமைந்திருப்பதையும் குறிப்பிடத்தக்கது. ஓவியர் செய்திருப்பதுகொலை அல்ல. கொலை என்றால் பிள்ளையாரை வெட்டி தலை, கை, கால், வேறு எனப்பிரித்திரிக்க வேண்டும்; அது; செய்யப்படவில்லை. பொய்யான ஆடைகள், ஆபரணங்கள், ஆயுதங்கள் என்பவற்றைக் கழற்றி நிர்வாணப்படுத்தியிருக்கிறார். அதன் மூலம் !!வெற்றிகண்டிருக்கிறார்!! பிள்ளையாரை அழிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்திருக்கிறார்.

ஓவியர் என்ன நோக்கத்துடன் வரைந்தாலும் அவரால் பிள்ளையாரைச் சிதைக்க முடியவில்லை. இதைவிடப்பிள்ளையார் திருவுருவம் எமக்கு ஒரு அரிய கலைப்படைப்பாகும். அதாவது மனித மிருக உடல்களை இணைத்துப்படைக்கும் அரிய கலைப்படைப்புக்கள் பல எம்மிடம் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் மனித உடலுக்குப்பூட்டிவிடப்பட்ட முகமூடிகள் போல் உள்ளன. பிள்ளையார் அப்படி அல்ல தனிய உடலின் தொந்தி கூட யானைக்கும் பொருந்துமாறு படைத்திருப்பதுசிறப்பானது. யானைத்தலை இல்லாவிட்டாலும் யானை வயிறு பிள்ளையார் என்பதைக்காட்டி விடும்.

எமது எதிர்பார்ப்புக்கள் இலவம் பஞ்சாகிப் போனாலும் தரமான படைப்புக்களைத்தரிசித்த மகிழ்ச்சி; அளவிட முடியாத மனித உழைப்புடன் படைக்கப்பட்ட இப்படைப்புக்கள் பூடகமாலை. ஆனாலும் அழகானவை. பார்க்கப் பார்க்க ஏதோவொரு கோணத்தில் தும்பிக்கையும் தொந்தியும் ஏனைய உறுப்புக்களும் தெரியும் இவ்வோவியங்களை முதல் விளங்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஓவியர் கூறுவது போல முதலில் ரசிக்க வேண்டும். ரசிக்கரசிக்க ஓவியம்தானாகவே விளங்கும்; அந்தளவுபொறுமை பார்ப்பவர்களுக்கு இல்லாதிருந்தால் அது துரதிஸ்டமாகும். அதனால் சிலரது ரசனைக்கு விருந்தாகாத போதும் விசாரணைக்கு விருந்தானது;

நாங்கள் திரும்பினோம்: ஆனால்ப் போர் உருவங்கள் என்ற பெயர் முற்றிலும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. போர் பிள்ளையாரில் தெரியாவிட்டால் என்ன தெரிந்தால் என்ன போருக்கும் பிள்ளையாருக்கும் இங்கு முடிச்சுப்போடத் தேவையில்லை. அழியாத அல்லது அழிக்க முடியாத பிள்ளையார் என்று பெயர் வைத்திருந்தால்க்கூட அழகாக இருந்திருக்கும். போர்என்றவுடன் இரத்தமும் துப்பாக்கிகளும் தென்படும் என்ற எமதுஎண்ணத்துக்கு இது ஏமாற்றமல்லவா? அத்தோடு இன்று எம்மக்கள் இதன் அழகினை ரசித்து அதனுள் இருந்து பூடகமாகக்கிடக்கும்கருத்துக்களைத்தேட அவகாசமில்லாதவர்கள். எனவே இவ்ஓவியக்காட்சி மக்களுக்கு விறுவிறுப்பைஊட்டாதுஇருந்திருக்கலாம், ஆனால் படைப்பாளி சற்று சமூகத்துள் இறங்கி போரில் பிள்ளையாருடன் தான் விளையாடுவதை மேம்படுத்தவரும் அப்போது அவரதுவெற்றி இன்றைய வெற்றியைவிட பலமடங்காகும் என்பதுஉண்மையாகும்.

- சோ. சி. கலைக்கதிர்

## பிறமுக அறிமுகம்



எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ

சிறிலங்காவின் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர். முன்னாள் அமைச்சர், எதிர் காலத்தில் சனாதிபதியாகும் கனவில் (நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக மட்டும்) இருப்பவர்

வாயளவில் இடதுசாரிக் கொள்கைகள் பேசினாலும் மனதளவில் பேரினவாதக் கொள்கைகளின் காவலனாக இருப்பவர்.

'பௌத்த சிங்கள மக்களின் காவலன்' என்று திடீரென பௌத்த பீடாதிபதிகள் ஒருநாள் இவரை அழைத்து ஆசிர்வதித்து முடிசூட்டிய பொழுது அதிர்ச்சியடைந்தது சந்திரிகாவும், பொதுசன ஐக்கிய முன்னணியும் மட்டுமல்ல இவருமே தான்.

அந்த ஒருநாளின் இவருக்கு ஏறிய 'காற்றைப்' போல் எவருக்குப் ஏறியதில்லை.

சந்திரிகாவால் 'ஓட்டைவாயர்' 'ஒலிபெருக்கி' என்றெல்லாம் பல தடவைகள் இண்டலடிக்கப்பட்ட இவர் அமைச்சரவை ரகசியப் பேச்சுவார்த்தைகளைக் கூட பத்திரிகையாளருக்கு கசிய விடுபவர் என அவரால் இனங்காணப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர். இவரை வைத்துக் கொண்டு எவரும் எந்த முக்கிய விடயத்தையும் பேசுவதில்லை.

ராஜபக்ஷ குடும்பமே அரசியலைத் தமது தொழிலாகக் கொண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. ஜோர்ச்ராஜபக்ஷ, நிருபமா ராஜபக்ஷ, சமல்ராஜபக்ஷ, என்று தொடரும் இவர்களின் அரசியல் 'சாம்ராஜ்யம்' அம்பாந்தோட்டை மாவட்டத்தை தமது கைகளுக்கு ஆட்டிப்படைத்தவரும் ஒன்றாகும்

ஆனானப்பட்ட பே .... ரினவாதியான ரத்னசிறி விக்கிரமநாயக்காவையே ஓரங்கட்டி, அனுராபண்டாரநாயக்காவை அலட்சியமாகத் தள்ளிவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இவர் அமர்ந்து கொண்டமை இவரின் சாதுரியமேயாகும். எனினும் இத்திறமைக்குப் பக்கபலம் பௌத்த பீடங்கள் தான் என்பது மிகத் தெளிவான விடயம்.

சந்திரிகாவை மிக மனமுடைய வைத்ததும் இவரது பதவி ஏற்பு வைபவம் தான்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் பண்டாரநாயக்கா பரம்பரையின் கைகளை விட்டுப் போய் விடுமோ என்ற அச்சம் சந்திரிகாவையும், அனுராவையும் பிடிக்க ராஜபக்ஷவின் இந்த பதவியே காரணமாயிற்று;

ஆனாலும் இந்தப் பதவிக்கு மட்டுமல்ல எந்தப் பதவிக்குமே 'லாயக்'கில்லாதவர் என்பது இவருடன் நெருங்கிப் பழகுவோர் கூறும் விடயம்.

ஊறுவாயர், கோழை, கோமாளி, பகட்டாரவாரப் பேச்சாளர் என இவரை அரசியல் வட்டாரத்தில் பலரும் பலவிதமாக வர்ணிப்பதுண்டு

இவரது சனாதிபதி அல்லது உயர் பதவிக் கனவுக்கு இடையூறாக இருப்பார் என இப்போது 'கனவிலும் கூட' அஞ்சுவது அனுரா பண்டாரநாயக்கவுக்குத்தான்;

இவரது மாவட்டத்திற்குள் இவருக்கு 'தலைவலி'யாக வந்து நுழைந்திருப்பவர் சஜித் பிரேமதாச ...

இவரது பயம் 'சந்'திராவிடமுள்ள அதிகாரம்'

இவரது பலம் பௌத்த மத பீடங்களின் ஆசி ...

இவரது குழப்பம் புரிந்துணர்வு ஒப்பந்தமும் விடுதலைப் புலிகளின் அபரிமித செல்வாக்கும்.

தற்போதைய நிம்மதி அனுருத்தரத்வத்தை சிறையிலிருப்பது ..

### — தலைவர் பிரபாகரனை சந்தித்தது குறித்து

# தீயசக்திகளின் குற்றச் சாட்டுக்கு ரஊப் ஹக்கீம் கடும் கண்டனம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தலைவரை சந்தித்ததன் மூலம்நாம் நாட்டுக்கு துரோகமிழைத்து விட்டதாக குற்றம்சாட்டும் தீயசக்திகளை வன்மையாகக் கண்டிப்பதாகசிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமானரஊப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்ததால் நாட்டின் இறைமைக்கும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கும் எந்த வித பாதிப்பும்ஏற்படவில்லை என ஐக்கிய நாடுகள் தூதுக் குழுவைச்சந்தித்து உரையாடியபோதே அவர் கூறினார்.

எனக்கும், ஏனைய சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் இருவருக்கும் எதிராக சிலர் நம்பிக்கையில்லாப்பிரேரணையொன்றை கொண்டுவர முயல்கின்றனர்; இது தென்னிலங்கை மக்களின் உணர்வுகளை கிளறுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜெயலலிதாவின் தீர்மானம் குறித்து இலங்கை மக்கள் வேதனை

### கொழும்பு மக்கள் மறுமலர்ச்சிக்கழகம் அறிக்கை

(கொழும்பு)
இலங்கையில் கடந்த இருபது வருடகால அமைதியின்மைக்குப் பின் சமாதானக் காற்றை சுவாசிக்க விரும்பும் இலங்கை மக்களுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைவர் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோருவது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போலிருக்கிறதென கொழும்பு மக்கள் மறுமலர்ச்சிக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைதியும் சமாதானமும் கூடிவரும் இவ்வேளையில் தமிழர் தாயகமாம் தமிழகத்தில் இருந்து வரும் செய்திகள் எமது மக்களை மிகவும் வேதனையடையச் செய்கிறது. சமாதானத் தீபமேற்றும் இவ்வேளையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் சமாதானத்துக்காக ஏங்கும் இலங்கை மக்கள் அனைவரையும் மிகவும் மன வேதனைக்குள்ளாக்கி வருகின்றது.

எமது நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கிடையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் தமிழக முதல்வரது அறிக்கை மிகவும் கேலிக்குரியதாகவும் வெட்கத்துக்குரியதாகவும் இருக்கிறது என அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### — அமெரிக்க கடற் படையின் —

# ஏவுகணைநாசகாரிக் கப்பல் கொழும்பு வருகிறது

(கொழும்பு)
அமெரிக்க கடற்படையின் ஏவுகணை நாசகாரி கப்பல்அடுத்தவாரம் கொழும்பு வருகிறது.

எட்டுவருடகாலத்தின் பின்னர் அமெரிக்க கடற்படையின் நாசகாரிக் கப்பலொன்று சிறிலங்காவுக்குபயணம் மேற்கொள்வது இதுவே முதற் தடவையாகும்.

இந்தக் கப்பல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு வரும்என கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் அஸ்லிவில்ஸ் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்புவதற்காக பத்து மணித்தியாலம் கொழும்புத்துறைமுகத்தில் தங்கி நிற்கும் இந்தக் கப்பலின் அதிகாரிகள சிறிலங்கா கடற்படைஅதிகாரிகளைச்சந்தித்து பேசவுள்ளனர்.

### — தமிழக மீனவர்கள் மீதான

# தாக்குதலை நிறுத்துக சந்திரிகாவிடம் கோரல்

(சென்னை)
தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு உலகத் தமிழர்பேரவை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனம் இது குறித்து சிறிலங்கா சனாதிபதிக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களால் இந்திய நாணயப்படி சுமார் நூறு கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களாகப் பணிபுரிய விரும்பும் பின்வரும்தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

க. பொ. த (உ/த) சித்தியுடன் க.பொ. த (சா/த) இல் ஆங்கில பாடத்தில்அதி விசேடசித்தி (ஏ)உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 30. 04. 2002க்குமுன் வலயக் கல்விக்பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்

# உலகவங்கி - சர். நா. நிதியக் கொள்கைகள் ஒடுக்குமுறைக்குத் துணைபோகின்றன

### வாஷிங்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)
அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மேற்குக்கரைமீதான இஸ்ரேலின் நடவடிக்கைகள் மற்றும் உலக மயமாக்கலுக்கு எதிராகவும் பல்லாயிரக் கணக்கானவர்கள் வாஷிங்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

வாஷிங்டனில்இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் முப்பதாயிரம் முதல் ஐம்பதாயிரம் பேர்வரை கலந்துகொண்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ள அதேவேளை எழுபத்தைந்தாயிரத்துக்கும்அதிகமானவர்கள்கலந்து கொண்டதாக இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

வாஷிங்டனின் பென்சில்வேனியா அவென்யூ ஊடாக ஆர்ப்பாட்டக்காரர்கள் வாஷிங்டனை வந்தடைந்ததாகவும் இஸ்ரேலுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

மேற்குக்கரையில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சான் பிரான்சிஸ்கோ எனும்இடத்தில் பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். பலஸ்தீனக்கொடிகளை வைத்திருந்த இவர்கள் ''பலஸ்தீனத்துக்கு விடுதலை'' எனக் கோஷங்களை எழுப்பினர்.

சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் மாநாடு இடம்பெறவுள்ளதன் காரணமாக வாஷிங்டனின் நகர வீதிகள் ஒருகட்டத்தில் வெறிச்சோடிக் கிடந்ததாகவும், ஆர்ப்பாட்டங்கள்இடம்பெறலாம் என்ற அச்சத்தின் காரணமாகபொலிசார் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அதிகரித்து இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் உலக வங்கியினதும், சர்வதேசநாணய நிதியத்தினதும் அலுவலகங்களிற்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர், உலக வங்கியின் நடைமுறைகள் காரணமாக சூழலுக்கும், ஏழைகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதை அவர்கள் எதிர்த்துள்ளனர்.

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கொள்கைகள் ஒடுக்குமுறைக்கு துணை போவனவாக உள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவற்றின் நிலைப்பாடுகளை எதிர்ப்பதற்கான தருணம் இதுவெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். வெள்ளைமாளிகைக்கு எதிரிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுள்ளன. ஆயிரக்கணக்கானவர்கள் பலஸ்தீன கொடிகளை ஏந்திய படி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்: இஸ்ரேலுக்கு எதிராகக் கடும் கோஷங்களை எழுப்பியுள்ளனர். ஈராக்கிற்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனினும் இந்த ஆர்ப்பாட்டங்களின் போது வன்முறைகள் எதுவும் இடம் பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆர்ப்பாட்டங்களை மிகப் பெரிய வெற்றி என அதனை ஏற்பாடு செய்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பலபகுதிகளைச் சேர்ந்தமக்கள் ஒரே இடத்தில் திரண்டமை குறிப்பிடத்தக்கது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


இதேவேளை அமெரிக்க வரலாற்றிலேயே பலஸ்தீன மக்களுக்கு பெருமளவில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது இதுவே முதல் தடவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது
(அ. ப)

### பட்டதாரி விபர வங்கி

(புதுக்குடியிருப்பு)
வேலையற்ற பட்டதாரிகளின் விபரங்களை ஒன்று சேர்ப்பதற்காக பட்டதாரிகள் விபர வங்கியொன்று மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் அமைச்சின்கீழ் நிறுவப்பட்டுள்ளது.

இந்த வங்கியில்பதிவுசெய்து கொள்வதற்கு விருப்பமுள்ள வேலையற்ற பட்டதாரிகள் விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகிறீர்கள். இதன் மாதிரி விண்ணப்பப்படிவம்முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிமனையில் பார்வையிடலாம் என முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் த. குருகுலராசா அறிவித்துள்ளார், (08)


தரமும் நாகரீகமும் மிக்க
நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்



சிறி நதியா நகை மாளிகை
01, கஸ்தூரியார் வீதி,
ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

கிளை:-
56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுங்கத் திணைக்களத்தினால்

# அரசுடமையாக்கப்பட்ட சொத்துகளை அரசு விற்பனை செய்யதீர்மானம்

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தினால் அரசுடமையாக்கப்பட்ட சகல சொத்துக்களையும் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள், புடவைகள் மாணிக்கம், தங்க ஆபரணங்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது;

நேற்று கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இதன் மூலம் ஒரு மில்லியன் ரூபாய் வருமானத்தைஈட்டிக் கொள்ளவும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

சிறிலங்காவின் மத்தியவங்கியில் இருக்கும் அரைத்தொன் கொண்ட தங்க ஆபரணங்களை விற்பனை செய்வதற்கும் அமைச்சரவைதீர்மானித்துள்ளது.

1989 ஆம் ஆண்டு வன்செயல் காலத்தில் மக்கள்விடுதலைமுன்னணியால் கொள்ளையடிக்கப்பட்டு பின்னர் படையினரால் கைப்பற்றப்பட்ட தங்க ஆபரணங்களையும் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவு திட்ட துண்டு விழும் தொகையை இதன் மூலம் சமப்படுத்த முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 1800 ஏக்கர் சிறுபோகம்

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் இம் முறை 1800 ஏக்கரில் சிறுபோகநெற் செய்கை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமாலைகருங்கண்டல் மகாவித்தியாலய மண்டபத்தில்நடைபெற்ற சிறுபோக ஒழுக்கூட்டத்திலேயேஇத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது:

இத்தீர்மானத்தின்படி இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் 900 ஏக்கரும் இராணுவக்கட்டுபாடற்ற பகுதியில் 900ஏக்கரும் செய்கை பண்ணுவதென முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் குருவில்வான், வட்டக்கண்டல் பகுதியில் 50 ஏக்கர் உப உணவுச் செய்கை பண்ணவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னார்மாவட்டஅரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில். கமநல அபிவிருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி நீர்ப்பாசன பொறியியலாளரும் கட்டுக்கரைக்குள நீர்ப்பாசன பொறியியலாளரும், மன்னார், முசலி, மாந்தை மேற்குபிரதேசசெயலர்கள் மன்னார்மாவட்ட பொருண்மியமேம்பாட்டுநிறுவனப் பொறுப்பாளர் சவுந்தர், மன்னார் மாவட்ட நிர்வாக சேவைப்பொறுப்பாளர் சுவர்ணன், பெரும்பாக உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கிராம சேவையாளர்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்கள், மற்றும் இராணுவகட்டுப்பாட்டுப் பகுதியான,முசலி, நானாட்டான், மன்னார் ஆகிய பகுதி விவசாயிகள் உட்பட 500 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விதைப்பு முடிவுத்திகதி

மத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் சிறுபோகநெல்விதைப்புத் தவணை30,04-2002ம்-திகதியுடன் முடிவடைவதால் அனைத்து விவசாயிகளும் குறித்த திகதிக்குமுன்விதைப்பை முடித்துக்கொள்ளும்படி பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தினர் கேட்டுள்ளனர்

மன்னார் கருக்காய் தீவில்

# திலீபன் ஞாபகார்த்த மருத்துவ மனை திறப்பு

மன்னார் மாவட்ட கருக்காய்த்தீவில்மக்களின் நன்மை கருதி தியாகி லெப். கேணல் திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனை நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை நிர்வாகப் பொறுப்பாளர்மரிசால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட மீன் குடியமர்வுப் பொறுப்பாளர் ரமேஸ் ஏற்றியதையடுத்து தமிழீழ தேசியக் கொடியினை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் இலகன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தியாகி லெப்: கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு ஈகச்சுடரினை வட்டக்கண்டல் வைத்திய அதிகாரி அமிர்தலிங்கம் ஏற்றியதையடுத்து வடக்கு முஸ்லிம் ஒன்றியத் தலைவர் மௌலவி முசாரப் மலர் மாலையினை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனையின்பெயர்ப்பலகையினை வெள்ளாங்குளம்வைத்தியசாலைப் பொறுப்பாளர் தர்மலிங்கம் திரை நீக்கம் செய்துவைக்க மருத்துவ மனைக் கட்டடத்தை பங்குத்தந்தை இமானுவேல்பிள்ளை ஜெயபாலன் அவர்கள்நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வின்போது தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரைகளை, அடம்பன் போரெழுச்சிக்குழுத் தலைவரும் அடம்பன் மகா வித்தியாலய அதிபருமான அருள்தாஸ், பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய இமானுவேல்பிள்ளை ஜெயபாலன், வடக்கு முஸ்லிம் ஒன்றியத் தலைவர் மௌலவி முசாரப், மடு வலய கல்விப் பணிப்பாளர் ஜேக்கப், விவசாய உத்தியோகத்தர் கோமதாஸ், மாந்தை உதவி அரச அதிபர் மரியதாஸ், மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்றல் மாறன், மன்னார் திலீபன் ஞாபகார்த்த மருத்துவ மனைப் பொறுப்பாளர் சுகந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## பலாலிவிமானநிலையத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி

(கொழும்பு)

பலாலி. இரத்மலான விமான நிலையங்களை மீண்டும் உள்நாட்டு விமான சேவைத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவர அத்திணைக்களம் சிறிலங்காவின் படைத்துறை அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த இரு விமான நிலையங்களும் தற்போது வான்படையின் பொறுப்பில் உள்ளதால் அவற்றை அபிவிருத்தி செய்ய முடியாதிருப்பதாக விமான சேவை திணைக்கள பணிப்பாளர் கூறியுள்ளார்.

இதனால் இவற்றை உள்நாட்டு விமானசேவைத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவந்து உள்நாட்டு விமான சேவையினை விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுவருகிறது.

## பயிற்சி

(புதுக்குடியிருப்பு)

அரசாங்க பாடசாலைகளில் அதிபர்களுக்கான குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கும் 2002-03-04இல் 57 வயதிற்கு மேற்படாதோர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் வரும் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படவேண்டும். இது தொடர்பான விபரங்களை வலயக் கல்விப்பணிமனைகளில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (08)

## கலந்துரையாடல்

(கிளிநொச்சி(

கிளிநொச்சி மாவட்டத்தின் வலைப்பந்தாட்ட சம்மேளனம் அமைப்பது தொடர்பானகலந்துரையாடல்நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டதிகாரி (கிளிநொச்சி) அவர்களின் தலைமையில் நடைபெற ஏற்பாடகியுள்ளது. இதில் கழகங்கள், பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சோ)

ஜே. வி. பி.

ஜே. வி. பி. போன்ற இனவாத சக்திகள்அன்றுதொடக்கம் இன்றுவரை சமாதான முயற்சிகளைக் குழப்பியே வந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்தமையை இத்தகைய சக்திகள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே, இத்தகைய நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ளத் நாம் தயார் என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார்.

இதேவேளை, தமக்கு எதிராக இனவாத சக்திகள் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதற்குரிய நோக்கம் சமாதான முயற்சியினைக் குழப்பும் எண்ணத்திலேயேயாகும்.

நாட்டில் சமாதானம், அமைதி ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது: இந்நிலையில் எதிர்க்கட்சிகள் சமாதான முயற்சிகளை குழப்புகின்ற செயற்பாடுகளில் ஈடுபடாது பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி பாதுகாப்புப்பிரிவு

## உதவி இன்ஸ்பெக்டர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சனாதிபதி பாதுகாப்பு பிரிவைச்சேர்ந்த உதவிஇன்ஸ்பெக்டர் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளைப்பகுதியில்உள்ள புடவைக்கடை ஒன்றில் வைத்தேஇவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்:

சனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் நிகால் கருணாதிலக உட்பட பல பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுவருவது தெரிந்ததே.

தேர்தல்கால வன்முறைகள் கொலை முயற்சிகள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன;

தேசியத்

தார்கள் இப்போது இந்த அனுதாபத்தையும்விடமேலே போய் அவர்களே நேரடியாக விசயங்களை உணருகின்ற அளவுக்கு வந்து விட்டார்கள்.

ஈழத்தில் பல களங்களில் வெற்றிகளைப்பெற அது தொடர்பான செய்திகள் தொடர்ந்து வருவதனால், அந்தச்செய்திக்கு ஒரு மகத்துவம் வந்து விட்டது.

அதேவேளை உலக அளவில் தலைவர் பிரபாகரனின் பெயரும் பரவி வருகின்ற போது. அதி கூர்ந்து நமது இனத்தில் ஒரு தலைவர் உருவாகின்றார் என்பதை கூர்ந்து கவனித்தார்கள் அந்த அளவிற்கு அவர்களிற்கு ஆர்வம் இருந்தது:


## பணிநிலை வேண்டுகை

நிதித்துறை ஆளுகைக்குட்பட்ட நிறுவனமொன்றுக்கு கீழ்வரும் பணிக்கு பணியாளர்கள் தேவை. தகைமையுடையவர்கள் கீழ்குறிப்பிடப்படும் நாளில், குறிப்பிடப்படும் இடத்திற்கு தகைமைச் சான்றுகளுடன் நேரில் வருகை தரவும்.

பணிநிலை:- கணக்குப்பதிவாளர்/கணக்கு எழுதுநர்
அகவையெல்லை:- 18தொடக்கம் 35வரை
பால்:- ஆண், பெண் இருபாலாரும்
கல்வித்தகைமை:- க. பொ. த (சாதாரணதரம்) தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
அத்துடன்
க: பொ: த (உயர்தரம்) வர்த்தகப்பிரிவில் கற்றிருத்தல் வேண்டும்.
முன்னுரிமை:- புதுக்குடியிருப்பு. முள்ளியவளை, கிளிநொச்சிப் பிரதேசங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
குறிப்பு:- குறிப்பிட்ட பணியில் பட்டறிவுடையவர்கள் பட்டறிவுக்கான சான்றுகள் நிருபித்தால் முன்னுரிமை வழங்கப்படும்.
நேர்காணல்
நடைபெறும் இடம்: பணிமனை, மருதம் வாணிபம்-கிளிநொச்சி (கிளிநொச்சி அறிவு அமுது புத்தகசாலை அருகாமை)
காலம்:- 08-05-2002 புதன்கிழமை
நேரம்:- முற்பகல் 10.00மணி

ஆளுகை
மருதம் வாணிபம்:

(1724)



## பணிநிலை வேண்டுகை

○ அச்சுக்கோப்பாளர்
○ அச்சு இயந்திரம் இயக்குநர்
○ புத்தகம் கட்டுபவர்

ஆகியோர் தேவை. அச்சகம் ஒன்றிற்கு மேற்குறிப்பிட்ட பணிநிலைக்கு அவ்வப்பணிகளில் அனுபவம் உள்ள பணியாளர்கள் தேவை. தகுதி உள்ளவர்கள் 27-04-2002 அன்று பி. ப. 2. 30 மணிக்கு தகுந்த ஆவணங்களுடன் நடுவப்பணியகம் போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு, கிளிநொச்சி; என்ற முகவரிக்கு சமுகம் தரவும்;

நடுவப்பணியகம்:
போ. க. பிரிவு கிளிநொச்சி:

(கி-6817)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.